லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-7 இதழ்-10 மார்ச் - 2019 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



# தேர்தல் யுத்தம்



# வள்ளலார் அருளிய

# கல்ப மருந்து



## பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்







- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்



- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்



- சளி ▪ இருமல் ▪ கப ரோகங்கள்
- கபம் ▪ காசம் ▪ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ▪ பித்தம்

போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்



நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்

சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்

அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்




## எங்கே போனது சுயாட்சி கொள்கை?

மக்களவைத் தேர்தல் நெருங்கிவரும் சூழலில், தமிழகத்தின் பிரதானக் கட்சிகளான அதிமுகவும் திமுகவும் தங்கள் தொகுதி உடன்பாட்டுக் கணக்குகளை வெற்றிகரமாகத் தொடங்கியிருக்கின்றன. அதிமுகவுடனான கூட்டணியில் ஐந்து இடங்களைப் பெற்றிருக்கிறது பாஜக. எதிர்பார்க்கப்பட்டதைவிட இது குறைவான எண்ணிக்கைதான். இதுவரை அதிமுக அரசைக் கடுமையாக விமர்சித்துவந்த பாமகவுக்கு ஏழு இடங்கள் கிடைத்திருக்கின்றன. மறுபுறம், திமுக கூட்டணியில் கடும் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் 10 இடங்களைப் பெற்றிருக்கிறது காங்கிரஸ்.

1996 முதல் 2004 வரையிலான நான்கு மக்களவைத் தேர்தல்களில் காங்கிரஸ் அல்லது பாஜக என்று மாறி மாறிக் கூட்டணி வைத்துக்கொண்ட அதிமுக, 2009, 2014 தேர்தல்களில் தனித்தே களம் கண்டது. 2014 மக்களவைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட அதிமுக மொத்தம் உள்ள 39 தொகுதிகளில் 37 தொகுதிகளில் வென்றது குறிப்பிடத்தக்கது. ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் உருவான அரசியல் மாற்றங்களுக்குப் பின்னர் அதிமுக அதே நிலைப்பாட்டில் இருக்க முடியாதுதான். இந்த முறை பாஜகவுக்கு ஐந்து இடங்களையும் பாமகவுக்கு ஏழு இடங்களையும் தரும் நிலைக்கு அதிமுக வந்திருக்கிறது. தமிழகத்தில் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதில் அக்கட்சி காட்டும் அக்கறையே இதற்கு முக்கியக் காரணம் எனலாம்.

டிடிவி தினகரன் தலைமையிலான அமமுக தரும் அழுத்தம் ஒருபுறம், கிட்டத்தட்ட பெரும்பான்மை பலத்தை இழந்து நிற்கும் நிலை மறுபுறம் என்று அதிமுகவுக்கு இது சவாலான சூழல். மக்களவைத் தேர்தலுடன் 21 சட்ட மன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களும் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், இடைத் தேர்தல்களில் வெற்றி பெறுவது என்பதுதான் முதல்வர் பழனிசாமியைப் பொறுத்துவரை முக்கியத்துவம் வாய்ந்த விஷயம். அதேசமயம், பாஜகவுடன் கூட்டணியில் இருப்பதை மத்திய அரசில் பங்கெடுத்துக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகவும் பார்க்கிறது அதிமுக. வட மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க வாக்கு வங்கியை வைத்திருக்கும் பாமகவைக் கூட்டணிக்குள் கொண்டுவந்ததுதான் அதிமுகவைப் பொறுத்தவரை இன்னும் சாதகமான விஷயம் எனலாம். இடைத்தேர்தல்களிலும் பாமகவுடனான கூட்டணிக் கணக்கு கணிசமான அளவில் கைகொடுக்கும் என்பது அதிமுகவின் எண்ணம். இவர்களின் மாநில சுயாட்சிக் கொள்கை காற்றில் பறக்கிறது.

இந்தியாவின் கூட்டணி ஆட்சிகளில், திமுக முக்கியப் பங்கு வகித்திருக்கிறது. பல்வேறு கட்சிகளுடனான கூட்டணி அரசில் திமுக அங்கம் வகித்திருக்கிறது. ஒருவேளை அதிமுக ஆட்சி தனது பதவிக்காலமான 2021 வரை நீடிக்கும்பட்சத்தில், அடுத்து அமையவிருக்கும் மத்திய அரசில் அங்கம் வகிப்பது என்பது திமுகவைப் பொறுத்தவரை மிக முக்கியமானது.

கடந்த இரண்டு சட்ட மன்றத் தேர்தல்களில் தோல்வியைச் சந்தித்திருக்கும் திமுக, மக்களவைத் தேர்தலில் தொடர்ந்து இரண்டாவது முறையாகத் தோல்வியைச் சந்தித்தால் அது அக்கட்சிக்குப் பின்னடைவாக இருக்கும். திமுக தலைவர் கருணாநிதியின் மறைவுக்குப் பின்னர் அக்கட்சியின் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும் ஸ்டாலின், இந்தத் தேர்தல் தனது செல்வாக்கை நிரூபிப்பதற்கான மிகப் பெரிய வாய்ப்பு என்றே கருதுகிறார். இரு தரப்பிலும், பிற கூட்டணிக் கட்சிகளுடனான தொகுதிப் பங்கீட்டுப் பேரம் இன்னமும் இறுதிவடிவம் பெறவில்லை. கூட்டணி இறுதிசெய்யப்பட்ட பின்னர் தேர்தல் களம் மேலும் சூடுபிடிக்கும் என்று நம்பலாம்!

– ஆசிரியர்

# அலட்சியம் காட்டும் தமிழக மாணவர்கள்

தேசிய அளவில் கல்வியில் நல்ல முன்னேற்றம் கண்ட மாநிலங்களில் ஒன்று தமிழகம். ஆனாலும், பெருவாரியான தமிழக மாணவர்கள் மத்தியப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைக் கற்கும் பிரகாசமான வாய்ப்பை வருடாவருடம் நழுவவிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன் தமிழக மாணவர்கள் பலரும் வட இந்தியாவின் பழமையான மத்தியப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று கல்வி பயிலும் நிலை இருந்தது. ஆனால், தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை தமிழகத்தில் 1980-களில் அதிகரிக்கத் தொடங்கியது. அதன் பிறகு வட மாநிலங்களைத் தேடி படிக்கச் செல்லும் தமிழக மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது. இந்த எண்ணிக்கை பெருகினால் தமிழக மாணவர்களுக்கு அதிகப் பலன் கிடைக்கும்.

ஏனெனில், மத்தியப் பல்கலைக் கழகங்களில் நாட்டின் அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த வர்களும் அயல்நாட்டு மாணவர்களும் தங்கிப் பயில்கின்றனர். இப்படிப் பலதரப்பட்ட மாணவர்களுடன் இணைந்து படித்து அவர்களுடன் பழகும்போது, தொடர்பாற்றல் திறன் முதற்கொண்டு பல்வேறு ஆளுமைத் திறன்களை மேம்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். இப்படியான சூழலில் கல்வி பயிலும்போது ஒரு மாணவருக்கு வேலை வாய்ப்புக்கு அடிப்படையாகச் சொல்லப்படும் மென்திறன்கள் லாகவமாக வந்துசேரும்.

அதேபோல அகில இந்திய அளவில் நடத்தப்படும் தேசியத் திறனாய்வு தேர்வுகள் பற்றித் தெரிந்துகொள்ளும் வாய்ப்பும் அதிகம் உள்ளது. இங்கே படிப்பவர் களில் அநேகர் உயர்கல்விக்கான சேர்க்கை பெற்றுக் குடிமைப் பணிக்கான யூ.பி.எஸ்.சி. உள்ளிட்ட பல்வேறு தேர்வுகளுக்குத் தயார்படுத்திக் கொள்வதும் வழக்கம். இதற்கு ஏற்றவகையில், வட மாநிலங்களின் மத்தியப் பல்கலைக் கழகங்களில் வரலாறு, சமூகவியல் பாடப் பிரிவுகள் அதிக முக்கியத்துவம் பெற்று



விளங்குகின்றன. உலக நாடுகளில் பணியாற்றும் இந்தப் பல்கலைக்கழகங்களின் முன்னாள் மாணவர்களின் உதவிகளும் எளிதாகக் கிடைத்து விடுகின்றன.

வட இந்தியாவின் மத்தியப் பல்கலைக்கழகங்களில் கல்விக்கட்டணம் மிகவும் குறைவு. தமிழகத்தின் தனியார் பள்ளிகளின் நர்சரி வகுப்புகளின் கட்டணத்தைவிடக் குறைவு. இத்துடன், சிறந்த மாணவர்களுக்குப் பல்வகை உதவித்தொகை, ஊக்கத்தொகை உள்ளிட்ட வையும் அளிக்கப்படுகின்றன.

பெரும்பாலான மத்தியப் பல்கலைக் கழகங்களில் பொறியியல் கல்லூரிகளும், தமிழுக்கான பாடப் பிரிவுகளும் உண்டு. உத்தரப் பிரதேசத்தில் உள்ள அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம், பனாரஸ் இந்து பல்கலைக்கழகம், ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பாடப் பிரிவும் பயிற்றுவிக்கப்படுகிறது. இளநிலை தொடங்கி முதுநிலை, எம்.பில்., முனைவர் பட்டம்வரை இங்கே தமிழ் இலக்கியம் கற்பிக்கப்படுகிறது.

இங்கே தமிழ் பயிலும் மாணவர்களுக்கு அந்தப் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படும் அயல் நாட்டு மொழிகளையும் பிற இந்திய மொழிகளையும் கற்கும் வாய்ப்பும் கிடைக்கிறது. இதனால், இங்கே தமிழில் பட்டம் பெற்றவர்களுக்கு உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு அதிகம். இதுபோல, சமீப காலமாகத் தமிழுடன் சேர்த்துப் பிற மொழி கற்றவர்கள் பலரும் ஆசியாவின் பல்வேறு நாடுகளில் பணியாற்றி வருகின்றனர்.

வட மாநிலங்களில் கல்வி பயில இந்தி மொழி கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும் என்ற தவறான கருத்து நிலவுகிறது. மத்தியப் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் ஆங்கில மொழியில் கல்வி போதிக்கப்படுவதால், இந்திக்கான அவசியம் இல்லை. எனினும், அந்தப் பகுதிகளில் வழக்காடு மொழியாக இந்தி உள்ளதால் சில மாதங்களில் கற்று எளிதாகச் சமாளிக்கலாம். ஆங்கிலம் அறிந்தவர்களும் நடைமுறையில் பயன்படுத்தலாம். தட்பவெப்ப நிலையைப் பொறுத்தவரை கடுமையான வெயிலும் குளிரும் நிலவுவது உண்டு. எனினும், இவை சமாளிக்கும் வகையில்தான் இருக்கும்.

மத்திய பல்கலைக்கழகங்களில் பெரும்பாலானவை தங்கிப் பயிலும் வசதி படைத்தவை. இவற்றில் சேரும் 90 சதவீத மாணவர்களுக்கு விடுதி வசதி கிடைத்துவிடுகிறது. விடுதி, உணவு இரண்டுக்குமான கட்டணம் உ.பி.யின் அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் மாதம் சுமார் 1,500 ரூபாய் மட்டுமே. இது டெல்லியில் சுமார் ரூ.500 கூடும். கல்லூரிகளில் விடுதி வசதி இல்லை. இதனால், வெளியில் மற்ற மாணவர்களுடன் இணைந்து தங்குபவர்களுக்கு மாதம் 3000 ரூபாய்வரை செலவாகிறது. கல்விக் கட்டணமும் வருடத்துக்கு அதிகபட்சமாக ரூ.8,000 மட்டுமே.

மத்தியப் பல்கலைக்கழகங்களில் சேரத் தமிழகக் கல்வி நிறுவனங்களைவிட ஓரிரு மாதங்கள் முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும். இதற்காக அந்தப் பல்கலைக்கழகங்களின் இணையதளங்களில் கவனத்தைச் செலுத்த வேண்டும். இணையதளம் மூலம் விண்ணப்பித்தபின் நுழைவுத் தேர்வு நடத்தி மாணவர் சேர்க்கை நடைபெறும்.

சில பாடப் பிரிவுகளுக்கு நேர்முகத் தேர்வும் உண்டு. இதற்கான பாடத்திட்டம் குறித்த விளக்கம் இணையதளங்களில் உள்ளது. மத்திய அரசின் விதிமுறைகளின்படி அனைத்து இட ஒதுக்கீடுகளும் உண்டு. இதில், சில பல்கலைக்கழகங்களில் தொலைதூர மாநிலங்களில் இருந்து கல்வி பயில வருபவர்களுக்காகக் குறிப்பிட்ட சதவீத இட ஒதுக்கீடும் அளிக்கப்படுகிறது. இந்தப் பட்டியலில் தமிழகமும் இடம்பெற்றுள்ளதால் அந்தப் பலனைப் பெற விண்ணப்பங்களில் தவறாமல் குறிப்பிட வேண்டும்.



**- S. அனந்த கிருஷ்ணன்**

# வருமானம்தான் அரசுக்கு குறிக்கோள்

- சுகந்தி




தமிழகத்தில் டாஸ்மாக் கடையை மூடவேண்டும் என்று ஆங்காங்கே மாதர் சங்கம் சார்பில் பூட்டு போடும் போராட்டம் நடத்தி வருகிறோம். இதனாலேயே எங்கள் அமைப்பை சேர்ந்த பெண்கள் மீது ஏராளமான வழக்குகள் உள்ளன. பொதுவாக டாஸ்மாக் நிர்வாகம் இலக்கு வைத்து மது விற்பனை செய்து வருகிறது. இதே போன்று ரேஷன் கடைகளில் இலக்கு வைத்து எல்லோருக்குமான உணவு பொருட்கள் வழங்கப்படுகிறதா என்று பார்த்தால் கிடையாது.

இந்த டாஸ்மாக் கடைகளால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள் தான். பல வீடுகளில் அப்பா மாலை வீட்டுக்கு எந்த கோலத்தில் வருவாரோ என நினைத்து பல குழந்தைகள் நடுங்கி சாகும் நிலை இருக்கிறது. நாங்கள் சமீபத்தில் குடிபோதையால் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கான மாநாடு நடத்தினோம். அதில், 6 ஆயிரம் பேரை சந்தித்தோம். அதில் குடிப்பழக்கத்திற்கு ஆளானவர்களின் அம்மா, மனைவி, குழந்தைகளை வரவழைத்தோம். அந்த மாநாடு எங்களை கண்கலங்க வைத்தது.



சில குழந்தைகள் இந்த மாநாட்டில் எங்களது அப்பா மிகவும் அன்பானவர், மாலையில் எப்படி வருவார் என்பது தெரியவில்லை. இதனால், மாலையில் அவர் வருவதற்கு முன்பு நாங்கள் ஒளிந்து கொள்வோம். அவர், குடிபோதையில் சாப்பிட்டு படுத்தால் சரி. இல்லையெனில் தகராறு செய்வார் என்று அழுது கொண்டே கூறினார்கள். சிலரது மனைவிமார்கள் நித்தம் நித்தம் மன போராட்டத்தை சந்தித்து

வருகிறோம். எனது கணவர் செத்தால் கூட பரவாயில்லை என்று கூறினார்கள்.

டாஸ்மாக் கடையை மூட வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. அவர்களுக்கு வருமானம் தான் இலக்கு. இந்த சமூகத்தில் வாழும் மக்களை பற்றி கவலை இல்லை. அதே நேரத்தில் தேர்தல் வந்தால் பூரண மது விலக்கை அமல்படுத்துவோம் என்று வாக்குறுதி அளிக்கின்றனர். 21 வயதிற்கு கீழ் உள்ளவர்களுக்கு டாஸ்மாக் கடைகளில் மது தரக்கூடாது என்று நாங்கள் பிரச்சாரம் செய்து வருகிறோம். இதை கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும். நிறைய டாஸ்மாக் கடைகள் பக்கத்தில் வட்டிக்கு அதிகமாக பணம் விடுபவர்கள் நிற்கிறார்கள்.

அவர்கள், டாஸ்மாக் கடையில் குடிக்க வருபவர்களுக்கு பணம் கொடுத்து, அந்த இடத்தை வியாபாரம் செய்யும் மையமாக்கி விட்டனர். சம்பாதித்ததும் பத்தாது என்று வட்டிக்கு கடன் வாங்கி குடிக்கின்றனர். அப்படி தங்களது உழைப்பை முழுவதும் வட்டிக்கு பணம் கொடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டவர்கள் இன்று பலர் உள்ளனர். ஒட்டுமொத்தமாக சமூகத்தை சீரழிக்கின்றனர். விதவைகள் எண்ணிக்கை அதிகமாகி கொண்டே இருக்கிறது. அதுவும் இளம் விதவைகள் ஏராளமான பெண்கள் உள்ளனர்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னரே 17 லட்சம் விதவைகளுக்கான பென்ஷனை நிறுத்தி வைத்து விட்டனர். ஒருபக்கம் விதவைகள் உருவாக காரணம் அரசாங்கம் தான். இன்னொரு பக்கம் விதவைகளுக்கு பென்ஷன் கொடுப்பதை குறைப்பதும் அரசாங்கம் தான். இதை எதிர்த்தும் நாங்கள் போராட்டம் நடத்தி வருகிறோம். தமிழகத்தில் மதுகடைகளை படிப்படியாக மூட நடவடிக்கை எடுக்க வேண்டும். போதை எதிர்ப்பு பிரச்சாரம் செய்ய வேண்டும். மதுவுக்கு அடிமையானவர்களை மீட்க அரசே மறு வாழ்வு மையம் அமைக்க வேண்டும்.

- கனகதுர்கா


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

MAKKAL VISARANAI MONTHLY MAGAZINE

# மக்கள் விசாரணை®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-7 இதழ்-10 மார்ச்-2019

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
V. அருணாசலம், A.C. குமார், S. அனந்த கிருஷ்ணன், M.A.,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
A.பாலகிருஷ்ணன் கோவை, நாகராஜ் மூணாறு
R.ஜெயா தென்சென்னை, K.அழகர்சாமி வட சென்னை
S.ரமேஷ் காஞ்சி, மாரிமுத்து உளுந்தூர்பேட்டை
சுசீ ஈஸ்வர் தென்காசி, N.சிலம்பரசு தர்மபுரி
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, குருபாலகிருஷ்ணன்

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
V.கிஷோர் குமார், சதீஷ், அகிலாண்டேஸ்வரி
குருதேவ், ஆரணி ஏழுமலை, M.முருகன்
சத்தியநாராயணமூர்த்தி, N.குப்புசாமி, முரளி
நீலகண்டன், N.சீனிவாசன், G.ஆனந்த்குமார்

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M.அருணாசலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**



நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

இந்தியாவில் நியமிக்கப்பட்ட கல்விக் குழுக்களுக்கும் குறைவில்லை. அதுபோலவே அக்குழுக்களின் ஆரோக்கியமான பரிந்துரைகளுக்கும் குறைவில்லை. பலரது கருத்துகளுக்கு இடம்கொடுத்து உருவாக்கப்பட்ட அருமையான ஆவணம் 2005-ல் வெளிவந்த 'தேசியக் கலைத் திட்டம்'. அருமையான இந்த ஆவணத்தின் வழிகாட்டும் நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ள வாக்கியங்களைச் சற்றே கவனிப்போம்.

தம்மைச் சுற்றியுள்ள மற்றும் வகுப்பறைக்கு வெளியே உள்ள அறிவோடு இணைத்தல், கற்றலை மனன முறையிலிருந்து மாற்றுதல், பாடப்புத்தகம் சார்ந்ததாக மட்டுமல்லாமல் குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உகந்ததாகக் கலைத் திட்டத்தை வலுப்படுத்துதல், தேர்வுகளை நெகிழ்வானதாக நடத்துதல், நாட்டின் ஜனநாயகப் பன்முகத் தன்மைக்குள் புறந்தள்ளாமல் தனித்துவத்தை வளர்த்தல் என்பது போன்ற தேசியக் கலைத் திட்டத்தின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டே கல்வி உரிமைச் சட்டம், 2009-ல் கொண்டுவரப்பட்டது.

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கும் மேலாக விவாதித்துக் கொண்டுவரப்பட்ட தேசியக் கலைத் திட்டத்தில் குழந்தைகளின் தேர்வுபற்றிய பயத்தை நீக்கும் பொருட்டு 6 முதல் 14 வயது வரை கட்டாயத் தேர்ச்சி என்ற நெறிமுறை வலியுறுத்தப்பட்டது. ஆனால், இப்படி கட்டாயத் தேர்ச்சி என்ற நடைமுறையில், ஆசிரியர்கள் அந்தந்த வகுப்புக்குரிய திறன்களைச் சரியாக அடையச் செய்வதில்லை; குழந்தைகள் விரும்பத்தக்க அடைவுத் திறன் இல்லாமல் அடுத்தடுத்த வகுப்புகளுக்குச் செல்கின்றனர், எனவே, கல்வித் தரம் பாதிக்கிறது என்ற அடிப்படையில், தற்போது இச்சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அதனாலேயே 5 மற்றும் 8-ம் வகுப்புகளுக்குப் பொதுத்தேர்வு நடத்தப்பட உள்ளதாக இத்தேர்வுகளை ஆதரிப்பவர்கள் வாதிடுகின்றனர்.

இதில் ஆசிரியர்கள், மாணவர்கள் இரண்டு தரப்பு குறித்தும் யோசிக்க வேண்டும். நடுத்தர அல்லது மாத வருமானம் உறுதிப்படுத்தப்பட்டோரின் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு எந்தவிதமான

# குழந்தைகளை வதைக்காதீர்கள்!



சட்டமும் இல்லாமல், கற்றல் அடைவுகளை அடைய வாய்ப்புகள் உள்ளன. ஆனால், அரசுப் பள்ளியையே நம்பிவரும் ஏழை எளிய மக்களில் பலரும் முதல் தலைமுறையாகக் கல்வி பெற வருவோரே. பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்கும் சரி, அவர்களது பெற்றோர்களுக்கும் சரி, பள்ளிக் கல்வி முறையே புதிதாக அறிமுகமாகும் ஒன்று. பல பெண் குழந்தைகள் பள்ளிகளுக்கு அனுப்பப்படுவதே பாதுகாப்பாக இருப்பார்கள் என்ற நோக்கத்தில்தான். இவ்வாறான நடைமுறை உண்மைகளையும் கருத்தில் கொண்டுதான் அவர்களுக்கான பொதுத் தேர்வுகளை யோசிக்க வேண்டும்.

ஒருபக்கம் மாணவர் நிலை இது என்றால், அரசுப் பள்ளி ஆசிரியர்களின் நிலை இன்னும் பரிதாபமானது. வீட்டில், சாம்பார் தயார் செய்யச் சொல்லிவிட்டுக் காத்திருந்தால் சாம்பார் கிடைக்கும். அதேநேரம், சாம்பார் தயாரிப்போரையே ஒவ்வொரு செயலும் செய்து முடித்துவிட்டு, ஒரு பதிவேட்டில் பதியச் சொன்னால் எப்படி இருக்கும்? அதாவது அடுப்பு பற்றவைத்தேன், தண்ணீர் ஊற்றினேன், காய்கறிகளை அரிந்தேன் என்று எழுதச் சொன்னால். இப்படியாகத்தான் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பல தேவையற்ற பதிவேடுகளைப் பராமரித்துக்கொண்டிருக்கின்றனர்.

ஆசிரியர்களை நம்பாமல் அவர்களைக் கண்காணிக்க பின்பற்றப்பட்ட பிரிட்டிஷ் கால நடைமுறைகள் பலவும் இன்றும் தொடர்கின்றன. இதனிடையே, வாக்காளர் சேர்க்கை, நீக்கம், சுகாதாரத் துறைப் பணிகள் என கல்விசாராப் பல்வேறு பணிகளை மேற்கொள்ளவும் அவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் பணிகளை மட்டுமே மேற்கொள்ளும் சூழல் உண்டானால் மட்டுமே அவர்கள் முழு மனதோடு கல்விப் பணியில் ஈடுபடும் சூழல் உருவாகும்.

பத்தாம் வகுப்பு கல்விச் சான்றிதழைக் கவனித்தால் ஒரு விஷயம் புரியும். இடைநிலைப் பள்ளியை விட்டு மேனிலைக் கல்விக்குச் செல்லும் சான்றிதழ் அது. இச்சான்றில் எங்கும் ‘தேர்ச்சி’ என்ற சொல்லாடல் வராமை தெரியாமல் விட்டதல்ல. அனைத்து மாணவர்களும் தேர்ச்சியடையட்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே அவ்வாறான நடைமுறை பின்பற்றப்படுகிறது. அந்நிலையை உருவாக்கவே பத்தாம் வகுப்புத் தேர்வுகளில் கவனம் குவிக்கப்பட்டு, சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு தேர்ச்சி சதவீதம் உயர்த்த



முயற்சிக்கப்படுகிறது. இதிலும் பல விமர்சனங்கள் உண்டு என்றாலும், ஒருவகையில் இவ்வயதை நெருங்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தற்போது அதுகுறித்த ஒரு புரிதல் மேம்பட்டுள்ளது.

தற்போது, ஐந்து மற்றும் எட்டாம் வகுப்புகளுக்கும் பொதுத் தேர்வு நடத்துவதால் என்ன ஆகிவிடப்போகிறது என்று பலரும் விவாதிப்பது காதில் கேட்கிறது. சமூக, பொருளாதாரரீதியாகப் பின்தங்கியுள்ளோரின் முதலும் கடைசியுமான புகலிடமாக அரசுப் பள்ளிகளே உள்ளன. இந்நிலையில், கல்விக் குழுக்கள், அறிக்கைகளின் பரிந்துரைகள் பற்றிய அறிமுகங்களெல்லாம் இன்னும்கூட பெற்றோர்களுக்கு முழுமையாகச் சென்றுசேரவில்லை. எனவே, பெற்றோர்களுக்கும் சேர்த்து, ஆசிரியர்களே அந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இத்தகைய தயாரிப்புக்கு ஏதுவான சூழலை அரசு முதலில் உருவாக்க வேண்டும். ஆசிரியர்களும் தொழில்சார் அறம்

- ஷ. சிவசங்கரன்

கட்டுமான தொழிலாளர்களுக்கு அம்மா உணவகத்தில் வழங்கப்படவுள்ள இலவச உணவை மானிய விலையில் வழங்காமல் உற்பத்தி விலையை நல வாரியத்திடமிருந்து வசூலிக்கும் வகையில் தமிழக அரசு, அரசாணை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் அம்மா உணவக நஷ்டத்தை ஈடுகட்ட நலவாரியத்தை பலிகடா ஆக்கவும், ₹2,111 கோடியை அப்படியே சுருட்டவும் திட்டம் தீட்டியுள்ள தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழகம் முழுவதும் பெரும்பாலான இடங்களில் அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில், சென்னை மாநகராட்சியில், 407 அம்மா உணவகங்களும், பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 247 அம்மா உணவகங்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 4 அம்மா உணவகங்கள் என்று மொத்தம் 658 அம்மா உணவகங்கள் செயல்பட்டுவருகின்றன. இந்த உணவகங்களில் மானிய விலையில் ஒரு ரூபாய்க்கு 1 இட்லி, ₹5 க்கு பொங்கல், மதியம் ₹3க்கு தயிர் சாதம், ₹5க்கு பலவகை சாதங்களும் விற்பனை செய்யப்படுகிறது. சென்னை மாநகராட்சியில் உள்ள உணவகங்களில் மட்டும் இரவில் ₹3க்கு 2 சப்பாத்திகள் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிலையில் கட்டுமான தொழிலாளர்களுக்கு அம்மா உணவகத்தில் இலவச உணவு வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. அதற்கான அரசாணையை நகராட்சி நிர்வாகத்துறை வெளியிட்டுள்ளது. அதில், கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் அடையாள அட்டையை காட்டி அம்மா உணவகத்தில் மூன்று நேரமும் இலவசமாக உணவு உட்கொள்ளலாம். அவ்வாறு உணவு உட்கொண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கையை உள்ளாட்சி அமைப்புகள் கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திற்கு மாதத்திற்கு ஒரு முறை அனுப்பும். இதன்படி அதற்கான தொகையை நல வாரியம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்தும் என்று கூறப்பட்டுள்ளது. இதைத் தவிர்த்து மற்றொரு பகீர் தகவலும் இந்த அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டுமான தொழிலாளர்கள் சாப்பிடும் உணவிற்கு மானிய விலை இல்லாமல் அதன் உற்பத்தி விலையே நலவாரியத்திடமிருந்து வசூல் செய்யப்படும் என்பதுதான் அந்த தகவல். அதாவது பொது மக்களுக்கு மானிய விலையில் ₹1 க்கு விற்பனை செய்யப்படும் இட்லியின் உற்பத்தி விலை ₹3 ஆகும். எனவே கட்டுமானத் தொழிலாளர்கள் உட்கொள்ளும் உணவிற்கு நல வாரியத்திடமிருந்து ₹3 வசூல் செய்யப்படும். இதைப்போன்றுதான் மற்ற அனைத்து உணவிற்கான தொகையும் உற்பத்தி விலையே வசூல் செய்யப்படும்.

ஒரு தொழிலாளி காலை 5 இட்லி, மதியம் இரண்டு சாதம், இரவில் 2 சாப்பாத்தி உட்கொள்கிறார் என்றால் அதன் உண்மையான மானிய விலை ₹18. ஆனால் மானிய விலை இல்லாமல் உற்பத்தி விலையின் அடிப்படையில் செலுத்தினால், 5 இட்லிக்கு ₹15, இரண்டு சாதத்திற்கு ₹30, 2 சப்பாத்திற்கு ₹9 என்று மொத்தம் ₹54யை, நல வாரியம் மாநகராட்சிக்கு அல்லது உள்ளாட்சி அமைப்புக்கு செலுத்தும். சராசரியாக நாள் ஒன்றுக்கு 100 தொழிலாளர்கள் உணவு உட்கொண்டால் உற்பத்தி விலையின்படி ₹5400ஐ நலவாரியம், உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்த வேண்டியது வரும். மாதக் கணக்கு பார்த்தால் தொகை லட்சத்தை தாண்டி செல்கிறது. ஆனால் மானிய விலைப்படி பார்த்தால் ₹1800 தான் செலுத்த வேண்டும். ஆனால்,





# தொழிலாளர்கள் நிதியை

# அமுக்க அதிரடி திட்டம்

தமிழக அரசோ, கட்டிட தொழிலாளர்களுக்கு இலவச சாப்பாடு என்று வெளியில் அறிவித்து, மறைமுகமாக அவர்களது பணத்தை, அவர்களுக்குத் தெரியாமல் எடுப்பதற்கான உத்தரவுதான் தற்போது போடப்பட்டுள்ளது.இதை எல்லாம் வைத்து பார்க்கும் போது நல வாரியத்தில் உள்ள கோடிக்கணக்கான தொகையை சுருட்டவும், அம்மா உணவகத்தில் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டவும் நல வாரியத்தை பலிகடா ஆக்கவும் தமிழக அரசு முடிவு செய்துள்ளது என்ற விஷயம் அம்பலம் ஆகியுள்ளது. தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் என்பது அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனமாகும்.

இந்த நிறுவனத்தில் 1995ம் ஆண்டு நலவாரியம் தொடங்கப்பட்டது. அப்போது முதல், தற்போது வரை அந்த நல வாரியத்தில் ₹2111 கோடி பணம் கையிருப்பில் உள்ளது. இந்தப் பணம் முழுக்க முழுக்க நலவாரியத்தில் உறுப்பினர்களின் நலனுக்காக செலவு செய்ய ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அந்தப் பணம் இலவச உணவு என்ற பெயரில் அரசுக்கு திரும்பச் செல்கிறது. இதனால் உண்மையான நிவாரணம், தொழிலாளர்களுக்கு கிடைக்காது என்ற சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. மேலும், தமிழகம் முழுவதும் வாரிய உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால் உணவு திட்டம் சென்னைக்கு மட்டும்தான் பொருந்தும். இதனால் மாவட்ட தொழிலாளர்களுக்கு செல்ல வேண்டிய பணம், சென்னையில் உணவுக்காக செலவு செய்யப்படுவது தொழிலாளர்களுக்கு அரசு செய்யும் மிகப் பெரிய துரோகம் என்று நல வாரிய உறுப்பினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

தமிழகத்தில் கடந்த டிசம்பர் மாதம் வரையில் கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் 29 லட்சம் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அதிகபட்சமாக சேலம் மாவட்டத்தில் 1 லட்சத்து 95 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். முதற்கட்டமாக சென்னை மாநகராட்சியில் மட்டும் இந்த திட்டம் அமல்படுத்தப்படவுள்ளது. சென்னையில் 45 ஆயிரத்து 347 தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

- குருதேவ்



முனைவர் ஆ.மவுரியன்



(17) வீர தமிழச்சிகளின் வரலாறு..!

# அசலாம்பிகை அம்மையார்

**விடுதலை வேட்கையை மக்களிடம் தன்னுடையப் பாடல்கள் மூலம் தெரிவித்து விடுதலை எழுச்சியை ஊட்டினார்**

திண்டிவனத்திற்கு அருகிலுள்ள 'இரட்டணை' என்னும் ஊரில் 1875 ஆம் ஆண்டு தோன்றியவர் அசலாம்பிகை அம்மையார். பெருமாள் ஐயர் இவரின் தந்தை ஆவார். பத்து வயது நிரம்பிய போதே அசலாம்பிகைக்குத் திருமணம் செய்விக்கப்பட்டது. சிறு வயதிலேயே தன்னுடைய கணவனை இழந்து விதவை ஆனார்.

தன்னுடைய தந்தையின் உந்துதலால் கல்வி கற்கத் துணிந்தார். அக்காலத்தில் கல்வி கற்க பெண்கள் முன்வருவது கிடையாது. இதனால் தந்தையார் ஆசிரியர் ஒருவரை வீட்டிற்கு வரவழைத்து தன் மகளுக்குக் கற்பித்தார். முறையாக அனைத்து இலக்கிய இலக்கணங்களையும் கற்றுத் தேர்ந்தார் அசலாம்பிகை அம்மையார்.

தன்னுடைய வாழ்நாளில் பாதியைத் திருப்பாதிரிப்புலியூர் என்று அழைக்கப் படுகின்ற கடலூரில் கழித்தார். பின்னர் சில காலம் வடலூரில் தங்கி இராமலிங்க அடிகளாரைப் பற்றி எழுதத் தொடங்கினார். 'இராமலிங்க சுவாமிகள் பதிகம்' என்னும் நூலை இயற்றி ஆன்மீக உலகத்திற்கு வழங்கினார். குழந்த சுவாமி பதிகம் என்னும் நூலையும் பின்னாளில் இயற்றினார்.

தேசியத்தில் தன்னை அதிகம் இணைத் துக்கொள்ள விரும்பிய அம்பிகை விடுதலைப் போராட்டத தலைவர்களின் கொள்கைகளைப் பெரிதும் பின்பற் றினார். விடுதலை வேட்கையை மக்களிடம் தன்னுடையப் பாடல்கள் மூலம் தெரிவித்து ஏற்ற விடுதலை எழுச்சியை ஊட்டினார்.

தான் இல்லத்தில் கல்வி கற்றது போலவே தன்னைக் காண வரும் பெண்டிருக்கும் கல்வியைக் கற்றுக் கொடுத்தார். அவ்வாறு கற்பிக்கும் போது சிலபல பாடல்களை எழுதி அப்பெண் களிடம் கொடுப்பார். அப்படிக் கொடுத்த அப்பாடல்கள் அனைத்தும் விடுதலைக் கனலை எழுப்பும் முகமாய் இருந்தது.

அம்பிகையின் பாடல்கள் இதழ்களில் இடம்பெறத் தொடங்கியது. அவரின் ஆற்றல் கண்டு பலரும் வியந்தனர். நாட்டுப்பற்று மிக்க இவர் அவர் காந்தி புராணம் என்று காந்தியின் வாழ்க்கை வரலாற்றை கவிதை வடிவில் எழுதி மூன்று பகுதிகளாக நூல்களாக வெளியிட்டுள்ளார். நல்ல கவி உள்ளம் படைத்தவர் என்று தெரிகிறது. முதல் மூன்று பகுதிகள் காந்தியின் 1924 ஆம் ஆண்டுவரையுள்ள வாழ்க்கைச் சம்பவங்களை விவரிக்கிறது.




காந்திஜிக்கு மிகவும் பிடித்த பாடல்களில் ஒன்று குஜராத் மகான் நரசிம்ம மேத்தா எழுதிய "வைஷ்ணவன் யார்?" என்ற கவிதையாகும். இதை இந்து யார்? என்ற கேள்விக்கு விடையாகவும் கொள்ளலாம். இதைப் பிற்காலத்தில் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை மொழி பெயர்த்ததை நாம் அறிவோம்.

ஆனால் அதற்கு முன்னரே காந்தி புராணத்தில் அசலாம்பிகை அம்மையார் கவிதையாக மொழி பெயர்த்துள்ளார். அதில் இவருடைய செஞ்சொற் கவி நயத்தைக் காணலாம். 'திலகர் புராணம்' என்னும் இரு நூல்களை ஆக்கினார். காந்திபுராணத்தில் காந்திமகானின் உணர்வை அப்படியே வெளிப்படுத்தியிருப்பார். 1910, 1920 ஆம் ஆண்டுகளில் பல ஆன்மீக நூல்களையும், சொற்பொழிவுகளையும் ஆத்திசூடி வெண்பா, இராமலிங்க சுவாமிகள் வரலாற்றுப் பாடல், குழந்தை சுவாமிகள் பதிகம், திருவாமாத்தூர்ப் புராணம், திருவுடையூர் (மேல்சேவூர்) தலபுராணம் இவர் எழுதிய நூல்கள்.

இவ்வுலகில் துயர் களைந்து நன்மை நடக்க வேண்டுமெனில் அறச்செயல் ஓங்க வேண்டும். கலிகாலத்தில் தீமையே எங்கும் ஓங்கி நிற்கும் இருப்பினும் அதனைக் களைய அரும்பாடுபட வேண்டும் என்றும் இதற்காக அவதரித்தவர் தான் மகாத்மா காந்தி என்றும் அவரை இந்நாட்டிற்குத் தந்த பாரதத் தாயின் காலில் விழுந்து வணங்குதல் வேண்டும் என்றும் கூறுகின்றார்.

திரு.வி.க அவர்கள் அம்மையின் அரும்பணியை அறிந்து 'இக்கால ஔவையார்' என்று புகழ்ந்தார். திரு.வி.க. போன்ற தமிழ் அறிஞர்களும் சித்தாந்த தீபிகை போன்ற பத்திரிக்கைகளும் எழுதியிருப்பதிலிருந்தே அவர் புகழ் குன்றின் மேலிட்ட விளக்கு போலப் பிரகாசிக்கிறது.

- தொடரும்





# போலீசார் தற்கொலை எண்ணிக்கை அதிகரித்துள்ளதா?:

## நீதிபதிகள் வேதனை!

தொடர் பணிச்சுமையால் ஆண்டுக்கு ஆயிரம் போலீசார் பணியில் இருந்து விலகுகிறார்கள். 200 போலீசார் தற்கொலை செய்கின்றனர் என ஐகோர்ட் கிளை நீதிபதிகள் வேதனை தெரிவித்தனர். மதுரையை சேர்ந்த கே.கே.ரமேஷ், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த பொதுநல மனு: தமிழக மக்கள் தொகை எண்ணிக்கை 8.25 கோடி. சென்னையில் 135 போலீஸ் ஸ்டேஷன் உள்பட தமிழகம் முழுவதும் 1,324 போலீஸ் ஸ்டேஷன்கள் உள்ளன. மக்கள் தொகைக்கு ஏற்றவாறு போலீசாரின் எண்ணிக்கை இல்லை. இதனால் தமிழகத்தில் தினந்தோறும் கொலை, செயின் பறிப்பு, கொள்ளை, ஆள் கடத்தல், ஏடிஎம் திருட்டு என நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. கூலிப்படைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

கூலிப்படைகளுக்கு ஆதரவாக அரசியல் கட்சிகள் இருப்பதால், ரவுடிகள் மீது நடவடிக்கை எடுக்க காவல்துறையினர் தயங்குகின்றனர். குற்றவழக்குகளில் அரசியல்வாதிகள் தலையிடுவதால் போலீசார் முறையாக விசாரணை செய்வதில்லை. இது தங்களுக்கு சாதகமாக இருப்பதால், தற்போது ரவுடிகள் துப்பாக்கிகளுடன் குற்றச்சம்பவத்தில் ஈடுபடுகின்றனர். ஆயுதங்களுடன் செயின் பறிப்புகளில் ஈடுபடுவதால், பெண்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலை உள்ளது.

சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர்களில் ஒருசிலர் சாதிரீதியாக பழகி ரவுடிகள் மீது

நடவடிக்கை எடுப்பதில்லை. தமிழகத்தில் உள்ள 1,324 போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஒரே ஒரு கட்டுப்பாட்டு அறை சென்னையில் மட்டும் உள்ளது. 100க்கு அழைத்தால் சென்னைக்குத்தான் அழைப்பு செல்கிறது. கட்டுப்பாட்டு அறையில் பணி புரிபவர்களுக்கு தமிழகத்தில் அனைத்து பகுதிகளும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவசரத்திற்கு 100ஐ அழைக்கும்போது சென்னைக்கு சென்று மீண்டும் சம்பந்தப்பட்ட போலீஸ் ஸ்டேஷனுக்கு தகவல் செல்வதால், போலீசார் சம்பவ இடத்திற்கு செல்ல 3 மணிநேரம் ஆகிறது. இதனால் குற்றச்சம்பவத்தில் ஈடுபடுபவர்கள் எளிதாக தப்பி செல்கின்றனர்.

எனவே, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நவீனமயமாக்கப்பட்ட கட்டுப்பாட்டு அறைகள் அமைக்க வேண்டும். போலீஸ் ஸ்டேஷன்களின் எல்லைகள் தொடங்கும் மற்றும் முடியும் இடங்களில் உள்ள தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ் சாலைகளில் போலீஸ் ஸ்டேஷன்களின் தொடர்பு எண்களை எழுதிவைக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் கிருபாகரன், சுந்தர் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், ''தமிழகத்தில் போலீசார் கூடுதல் பணிச்சுமையுடன் பணிபுரிகின்றனர். இதனால் போலீசார் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகின்றனர். விசேஷம், திருவிழா, பண்டிகை போன்ற நேரங்களில் நாம் வீட்டில் இருக்கும்போது, போலீசார் பணிபுரிகின்றனர். இதனால் அவர்கள் குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பதில்லை. ஒரு இடத்தில் கலவரம் ஏற்படும்போது அனைவரும் வீட்டிற்கு பயணிக்கிறோம். ஆனால் போலீசார் வீட்டில் இருந்து கலவர பகுதியில் பாதுகாப்பு பணிக்கு செல்கின்றனர். தமிழகத்தில் மக்கள் தொகைக்கு ஏற்ப போலீசார் எண்ணிக்கை அதிகரித்துள்ளதா? தொடர் பணிச்சுமையால் தமிழகத்தில் வருடத்திற்கு ஆயிரம் பேர் போலீஸ் பணியில் இருந்து விலகுகிறார்கள். 200 போலீசார் தற்கொலை செய்கிறார்கள்,'' என கூறிய நீதிபதிகள் வழக்கை 2 வாரத்துக்கு ஒத்திவைத்தனர்.

**- இர்வின்**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை


தொடர்புக்கு

## மக்கள் விசாரணை * அருணை முரசு

**Cell : 93821 33334 / 044 - 48615321**

**Email : writermouriyan@gmail.com**

# தேர்தல் யுத்தம்



அமித் பகாரியா இந்தியாவின் பெரும் தொழிலதிபர்களில் ஒருவர். 1938 இல் இருந்து வணிகத்திலும் 1949 இல் இருந்து தொழில் துறையிலும் முதலீடு செய்து வெற்றிகரமாக இயங்கி வரும் வணிகக் குடும்பத்தில் பிறந்தவர். 1992 இல் குடும்பத் தொழிலை நிர்வகிப்பதிலிருந்து விலகிக்கொண்டு, சொந்தமாக மருத்துவத்துறை சார்ந்த தொழிலை ஆரம்பித்து, மிகக் குறுகிய காலத்தில் டாட்டா, ரிலையன்ஸ், பிர்லா, சகாரா, போன்ற பெரும் நிறுவனங்களுடன் 2000 கோடி வர்த்தகம் செய்தவர். அதிக விற்பனையை எட்டிய மருத்துவ கட்டுமான திட்டமிடுதல் குறித்த நூல் ஒன்றை எழுதியவர். இந்தியன் எக்ஸ்பிரஸ், இமேஜஸ் ரீடெய்ல், இமேஜஸ் மெயில் இயர்புக் போன்ற இதழ்களில் கட்டுரைகள் எழுதியவர். இந்தியாவின் அனைத்து முன்னணி பத்திரிகை களிலும் இவரைப் பற்றி கட்டுரைகள் வெளியாகி யிருக்கின்றன. பிபிசி, சிஎன்பிசி, என்டிடிவி, ஸ்டார் டிவி போன்ற முன்னணி தொலைக்காட்சிகளிலும் இவரைப் பற்றிய செய்திகளும் நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகியிருக்கின்றன. சுருங்கக் கூறினால், இந்தியாவின் மேட்டுக் குடியினர் மத்தியில் நன்கு அறியப்பட்டவர். அவர்களில் ஒருவர்.

அமித் பகாரியா தொழில் - வணிகம் என்ற வட்டத்தோடு தன்னைச் சுருக்கிக்கொள்பவரும் இல்லை. அரசியலிலும் தீவிர ஆர்வம் காட்டி வருபவர். போர்த்திற வல்லுநர் - strategist என்று தன்னைப் பற்றி தானே சொல்லிக்கொள்பவர். அவருடைய வலைப்பக்கத்தில் தன்னை அவ்வாறே அறிமுகம் செய்துகொள்கிறார். (பார்க்க: https://www.amitbagaria65.com/home/tag/1914%3A%20NaMo%20or%20MoNa). நரேந்திர மோடியின் தீவிர ஆதரவாளர்.

இந்தியாவை காக்க கடவுள் எடுத்த அவதாரமே நரேந்திர மோடி என்ற பாஜக தீவிர தொண்டர்களின் நம்பிக்கையை அனுசரனையோடு பார்ப்பவர். இக்கருத்தை முன்மொழிந்து தொடங்கும் கட்டுரை ஒன்றை அவரது வலைப்பக்கத்தில் காணலாம். மீண்டும் நரேந்திர மோடியே பிரதமராக வேண்டும் என்ற தீவிரமான விருப்பத்தை கொண்டிருப்பவர். அதன்பொருட்டு, கடந்த ஆண்டு இவர் எழுதி வெளியிட்ட நூல் தான் ‘1914 - நமோ ஆர் மோனா’ (1914: NaMo or MoNa).

வர இருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் பாஜக வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை இந்நூலில் அலசும் இவர், அதற்கான சாத்தியங்கள் குறைவாக இருப்பதை ஒப்புக்கொள்கிறார். பாஜக-வின் செல்வாக்கு பல மாநிலங்களிலும் சரிந்திருப்பதையும் தென்மாநிலங்களில் பாஜக இன்னும் காலூன்றவே இல்லை என்பதையும் விலாவாரியாக அலசியிருக்கும் இந்நூலில், இந்நிலைமை தொடர்ந்தால், பாராளுமன்ற தேர்தலுக்குப் பிறகு எதிர்கட்சிகளின் கூட்டணி ஆட்சிதான் அமையும் என்றும் அவர்கள் மமதா பானர்ஜியை பிரதம மந்திரியாக தேர்தெடுப்பார்கள் என்றும் கணிக்கிறார்.

சரிந்திருக்கும் செல்வாக்கை மீட்டு, வரும் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெறுவதற்கு நரேந்திர மோடி அரசு செய்யவேண்டியவை என்ன என்று இவர் கூறும் ஆலோசனைகள் சுவாரசியம் மிக்கவை என்பதையும் மீறி அதிர்ச்சி தரக்கூடியவை.

தேர்தலுக்கு ஆறு அல்லது ஐந்து வாரங்களுக்கு முன்பாக, தாவூத் இப்ராஹீம் அல்லது ஹபீஃப் சையது (லக்ஷர் - இ - தய்பாவின் நிறுவனர்களில் ஒருவர்) ஆகிய இருவரில் ஒருவரை கொன்று இந்தியாவிற்கு கொண்டு வரவேண்டும். அதோடு, பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதிகளில் உள்ள பாகிஸ்தான் தீவிரவாதிகள் முகாம்களின் மீது ஒரு 'சர்ஜிகல் ஸ்ட்ரைக்' தாக்குதலை தேர்தலுக்கு முன்பாக தொடுக்கவேண்டும். அவ்வாறு செய்தால், பாஜக சிறிய வித்தியாசத்தில் வெற்றி பெற்றுவிடும்.

சோனியா காந்தி, ராகுல் காந்தி, ப்ரியங்கா காந்தியின் கணவர் ராபர்ட் வதேரா ஆகிய மூவரையும் ஊழல் வழக்குகளில் கைது செய்யவேண்டும். இவர்களோடு, ப. சிதம்பரத்தையும் ஊழல் வழக்கில் கைது செய்யவேண்டும். அதோடு, விஜய் மல்லய்யா அல்லது நீரவ் மோடி ஆகிய இருவரில் ஒருவரை கைது செய்து இந்தியாவிற்கு கொண்டு வரவேண்டும். மேலே குறித்துள்ள முதல் ஆலோசனையோடு சேர்த்து இவற்றையும் செய்தால், பாஜக 350 -ற்கும் மேற்பட்ட தொகுதிகளில் எளிதாக வெற்றி பெற்று அறுதிப் பெரும்பான்மையை எட்டிவிடும்.

மேலுள்ள இரண்டு ஆலோசனைகளையும் ஒரு மாற்று வழியாகத்தான் அமித் பகாரியா முன்மொழிகிறார். அவர் சொல்லும் முதல் ஆலோசனை இன்னும் தீவிரமானது. பாகிஸ்தான் மீது குறுகிய கால போர் ஒன்றை தொடுத்து, பாகிஸ்தான் என்ற நாட்டை உலக வரைபடத்திலிருந்தே அழித்துவிடவேண்டும் என்பதுதான் அவர் சொல்லும் முதல் ஆலோசனை.

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடு என்று உலக அரங்கில் பாகிஸ்தான் தனிமைப்பட்டு இருப்பதாலும், அதன் பொருளாதாரம் மோசமான நிலையில் இருப்பதாலும், அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பும் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளும் பாகிஸ்தானுக்கு எதிரான கண்டிப்பான நிலையை எடுத்திருப்பதாலும், இந்தப் போரை உலக நாடுகள் எதிர்க்கமாட்டார்கள் என்றும், 7 - 10 நாட்களில் போரை வெற்றிகரமாக முடித்துவிடலாம் என்றும் சர்வ சாதாரணமாக சொல்லிச் செல்கிறார் அமித் பகாரியா.

அமித் பகாரியாவின் இந்த ஆலோசனைகள் ஏதோ ஒரு பெரும் பணக்காரரின் அசட்டுத்தனமான பேச்சு அல்ல. பாஜகவின் அடிமட்ட தொண்டர்களிலிருந்து, உயர்மட்ட தலைவர்கள் வரை பலருக்கும் இருக்கக்கூடிய சிந்தனையை, வெளிப்படுத்தியுள்ளார் அமித் பகாரியா என்றே சொல்லவேண்டும்.

காஷ்மீரில் சிஆர்பிஎஃப் வீரர்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் என்ற செய்தி வெளியானவுடன், 'மக்களுடைய இரத்தம் கொதித்துக்கொண்டு இருக்கிறது' என்று நரேந்திர மோடி எதிர்வினை ஆற்றியிருக்கிறார். பாஜக மீண்டும் ஆட்சியை கைப்பற்ற அண்டை நாட்டின் மீது போர் தொடுப்பதுதான் கடைசி ஆயுதம் என்றால் அதற்கு பாஜகவின் அடிமட்ட தொண்டர்களிலிருந்து உயர்மட்ட தலைவர்கள் வரை தயங்கமாட்டார்கள்




என்பதை வெளிப்படையாக சொன்ன அமித் பகாரியாவின் 'சிந்தனையை' பாஜக தலைவர்கள் நடைமுறையில் பிரயோகம் செய்ய தயாராகிறார்களோ என்று எண்ணச் செய்கிறது அவருடைய எதிர்வினை.

அப்படி ஒரு போர் தொடுக்கப்பட்டால், அது அண்டை நாட்டின் மீதான போராக மட்டும் இருக்காது. சொந்த நாட்டில் தனது எதிரிகள் என்று கருதுவோர் மீதும் பாஜக தொடுக்கும் போராகவும் நீளும்.

- ஆசிரியர்



# சிந்தனை முத்துக்கள்



எத்தனை பேர்
எச்சில் பட்டாலும்
தீட்டு என்று
ஒதுக்கப்படாத ஒரே
பொருள் பணம்
ஒன்றுதான்!

ஒரு நிமிடம் கூட மொபைல் போனை
சுவிட்ச் ஆப் செய்யாமல் இருப்பவன்
காதலில் விழுந்தவன்....



நிமிடத்திற்கு ஒரு முறை சுவிட்ச் ஆப்
செய்பவன் கடனில் விழுந்தவன்.. 😛😛







கல்யாணிக்கு கல்யாணம் பண்ண
கல்யாணி அப்பா கல்யாணசுந்தரம்
கல்யாணிக்கு கல்யாணம் பன்ற மாப்ளய
கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணார்.
கல்யாணிக்கு கல்யாணம் புடிக்காம
கல்யாணம் வேணான்னு சொல்ல...
கல்யாணி கல்யாணம் புடிக்காம தான்
கல்யாணமே வேணான்னு சொல்றதா நினைத்து,
கல்யாணி அப்பா கல்யாணசுந்தரம்
கல்யாணியின் கல்யாணத்துக்கு
கல்யாணம் வேணான்னு
கல்யாணராமன்ற மாப்ளய பாக்க,
கல்யாணி கல்யாணமே வேணான்னு
கல்யாணராமண்ட்ட சொல்ல...
கல்யாணி அப்பா கல்யாணி
கல்யாணத்த எப்படி நடத்துவார்??????
நல்லா யோசிங்க......




அன்னைக்கு நூறு ரூபாய்க்கு வித்த ஒரு
ஓட்டு இன்னைக்கு 8000 ரூபாய்க்கு விக்குது..



இப்படி கடுமையாக விலைவாசி உயர்ந்தால்
நாங்கெல்லாம் அரசியலில் இருப்பதா
இல்லை ஆடு மேய்க்க போவதா...?






பொதுத்தேர்வில்
கேட்கப்பட்ட கேள்வி ...
கஸ்தூரி பாய்- குறிப்புவரைக?
மாணவன் பதில்:
இது மிகவும் நீளமான பாய்
இதில் நீங்கள் குடும்பத்துடன்
படுத்து உருளலாம்;
கஸ்தூரிபாயின் வகைகள்:
1) கோரைபாய்,2) தார்ப்பாய்,
3) குச்சிப்பாய்,4) துணிப்பாய்
5) சாக்குப்பாய் etc........
ஆசிரியர்;-
என்னங்க இது கஸ்தூரிபாய் பத்தி
எழுதச்சொன்னா கோரைப்பாய்,
தார்ப்பாய்னு எழுதியிருக்கான்
மற்றொரு ஆசிரியர் :
அட, உங்களுக்காவது
பரவாயில்லைங்க எனக்கு ,
கஸ்தூரி Boy இல்ல Girlனு_ ஒரே
வரியில முடிச்சுட்டாங்க.







## இன்றைய உலக நீதி

1000+ Facebook நண்பர்கள்
250+ Whatsapp நம்பர்கள்
இவ்ளோ பேர் இருந்தும் ICU வெளியில்
நமக்காக காத்திருப்பது நம் மனைவி,
குழந்தைகள் மற்றும் பெற்றோர் மட்டுமே
ஆனா அவங்களோடு தான் நாம்
நேரம் செலவிடுவதில்லை








# இந்தியா பாதுகாப்பான நாடா?

## வானிலை மற்றும் புவியியல் ஆய்வாளர்கள் விளக்கம்

வங்கக்கடல் பகுதிகளில் கடந்த மாதம் 12, 13-ம் தேதிகளில் அடுத்தடுத்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இதன் தாக்கம் சென்னை, ஆந்திரா அந்தமான் ஆகிய பகுதிகளில் உணரப்பட்டது. இவை சிறிய அளவிலான நில அதிர்வுகள் என்பதால் பெரிய பாதிப்புகள் இல்லை. இதற்கிடையே சென்னை உட்பட கடலோர நகரங்களுக்கு பூகம்ப அபாயம் அதிகரித்துள்ளதாக வலைதளங்களில் தகவல்கள் பரவின. ஆனால், தமிழகத்துக்கு அத்தகைய ஆபத்துகள் எதுவும் இல்லை என வானிலை, புவியியல் ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து இந்திய வானிலை ஆய்வு மையத்தின் பூகம்பவியல் ஆய்வாளர் சவுரவ் சைடியா கூறியதாவது: வங்கக்கடலில் உருவான பூகம்ப நிகவுழ்கள் இயல்பானவை. இதே பகுதியில் கடந்த ஆண்டு மட்டும் 170 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தியா அமைந்துள்ள புவித்தட்டு தொடர்ந்து மேல்நாக்கி வேகமாக நகர்வதால் வங்கக்கடலில் பூகம்பங்கள் உருவாகும் இடங்களில் சிறிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதுகுறித்து மிக உன்னிப்பாக ஆய்வு செய்து வருகிறோம். எனினும், தமிழகம் பாதுகாப்பான பகுதியில் உள்ளது. நம்நாட்டை 4 மண்டலங்களாக வானிலை ஆய்வு மையம் பிரித்துள்ளது. காஷ்மீர், இமாச்சல பிரதேசம், அசாம் , அந்தமான், குஜராத் உட்பட்ட மாநிலங்கள் 4-வது மண்டலத்தில் இடம் பெற்றுள்ளன. இந்த மண்டலத்தில் உள்ள பகுதிகளுக்குதான் நிலநடுக்க ஆபத்து அதிகம். டில்லி, சிக்கிம், உத்தர பிரதேசம், பிஹார் உட்பட மாநிலங்கள் 3-ம் மண்டலத்தில் உள்ளன. தமிழகம் 2-ம் மண்டலத்தில் உள்ளது. இங்கு 5 முதல் 7 சதவீதம் வரைதான் பூகம்பத்துக்கான வாய்ப்புள்ளது. அவையும் அதிகபட்சம் 6 ரிக்டர் அளவிலே இருக்கும். எனவே, இணையதளங்களில் உலவும் தவறான தகவல்களை நம்பி மக்கள் பயப்பட தேவையில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சென்னை ஐஐடி கட்டிட பொறியியல் துறை பேராசிரியர் எஸ்.ஆர்.சதீஷ் குமார் கூறும்போது,

"புவியின் மேற்பரப்பு சிறிய, பெரிய அளவிலான தட்டுகளால் ஒன்றிணைந்துள்ளது. இந்தத் தட்டுகள் புவியின் சுழற்சி மற்றும் கடல் அழுத்தம் காரணமாக தொடர்ந்து நகர்கின்றன. அவ்வாறு நகரும்போதும் தட்டுகள் ஒன்றுடன் ஒன்று உராய்வதால் நிலநடுக்கம் அல்லது பூகம்பம் உருவாகிறது. இந்த நிலநடுக்கத்தை முன்கூட்டியே கணிக்கும் தொழில்நுட்பம் இன்னும் அறியப்படவில்லை. ஆனால், அதன் தாக்கம் நிலநடுக்கமானி கருவி மூலம் அளவிடப்படுகிறது. இதில் 3 ரிக்டருக்கு கீழான அதிர்வுகள் பதிவாகாது.

ஆண்டுதோறும் சராசரியாக 14 செமீ அளவுக்கு புவித்தட்டுகள் நகர்கின்றன. இந்த நகர்வில் ஏற்படும் சிறிய உராய்வுகூட பெரிய நிலநடுக்கத்தை ஏற்படுத்தும் திறன் கொண்டது. மேலும், 7 ரிக்டருக்கு மேல் பதிவாகும் அதிர்வே அதிக பாதிப்பை ஏற்படுத்தும். இந்தியாவில் இமயமலையை ஒட்டிய மாநிலங்கள் மற்றும் அந்தமான் நிகோபர் தீவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகின்றன. மற்ற பகுதிகளில் அரி தாகவே அதிர்வுகள் உணரப்படும். இயற்கை பேரிடர்களை பொறுத்தவரை தமிழகம் மிக பாதுகாப்பாகத்தான் உள்ளது" என்றார்.

அண்ணா பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை பேராசிரியர் எல்.இளங்கோ கூறும்போது, ''ஐரோப்பாவும் ஆசியாவும் இணைந்த நிலப்பரப்புகள் எனினும், 2 கண்டங்களும் தனித்தனி தட்டுகளில் அமைந்துள்ளன. அதிலும் இந்தியா, ஆசிய தட்டில் இல்லாமல் தனி தட்டாகவே அமைந்துள்ளது. எனவேதான் இந்தியா துணைக்கண்டம் என்றழைக்கப்படுகிறது. இந்திய மற்றும் ஆசிய தட்டுகள் தொடர்ந்து வடக்கு நோக்கி நகர்கின்றன. இந்த நகர்வின்போது 2 தட்டுகள் இடையே ஏற்படும் மோதலால் இந்தியப் பகுதிகளில் நிலநடுக்கம் உருவாகிறது.

இமயமலை இன்னும் வளர்வதாக கூறப்படும் காரணமும் இதுதான். புவித்தட்டுகளின் எல்லையில் அமைந்துள்ள இடங்களில்தான் அதிக நில அதிர்வுகள் ஏற்படும். தமிழகத்தை பொறுத்தவரை பெரிய அளவில் நிலநடுக்க பாதிப்பு இருக்காது. கடலோரப் பகுதிகளில் மட்டும் சிறிய அளவில் அதிர்வுகள் ஏற்படலாம்'' என்றார்.

பூகம்பவியல் ஆய்வாளர் எஸ்.பிரகாஷ் கூறும்போது, ''புவியில் எங்கெல்லாம் மழை பெய்கிறதோ அதைச் சுற்றிய பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்படும். அதிலும் தீவுகளைச் சுற்றிய பகுதிகளில் வாய்ப்புகள் அதிகம். மழை அளவைப் பொறுத்து பூகம்பத்தின் தாக்கம் அமையும். ஏனெனில், கடலில் இருந்து வெளியாகும் உராய்வு வெப்பத்தால் புவித்தட்டுகள் நகர்கின்றன. அதன்படி ஆண்டுதோறும் சராசரியாக 5 லட்சம் நிலநடுக்கங்கள் பூமியில் ஏற்படுகின்றன. இதில் ஒரு லட்சம் நிலநடுக்கங்களே நம்மால் உணரப்படுகின்றன. அதில் 85 சதவீத பூகம்பங்கள் பசிபிக் கடலைச் சார்ந்த பகுதிகளிலேயே உருவாகின்றன.

எனினும், உலகில் மற்ற நாடுகளைவிட இந்தியா பாதுகாப்பாகவே உள்ளது. தமிழகத்தில் சென்னை தவிர்த்து மற்ற பகுதிகளில் பூகம்ப அபாயம் இல்லை. அந்தமான் மற்றும் சென்னையின் அமைவிடம் 13 டிகிரி வடக்கு அட்சரேகையில் உள்ளதால் நிலநடுக்கம் பாதிக்கும் இடங்களாக உள்ளன. எனினும், மழைக்காலம் முடிந்துவிட்டதால் இனி பூகம்ப அபாயமில்லை'' என்றார்.

- A. மவுரியன்


## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Contact : 93821 33334, 044 - 4861 5321

# உடைந்த எலும்பைக் கூட ஒட்ட வைக்கும் மூலிகை

இன்றைக்குத் தான் சாதாரண தலைவலிக்கே மருத்துவமனைக்கு ஓடுகிறோம். நம் முன்னோர்களை கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அவர்களின் வாழ்க்கையில் மூலிகைகளே பிரதானமாக இருந்தது.

அவர்களின் மருத்துவத்தில் முக்கியப் பங்கு வகித்த மூலிகை தான் அருகாம்பச்சை என்றும், சதாப்பு இலைச்செடி என்றும் அழைக்கப்படும் அருவதா செடி. இதன் பூர்வீகம் மேலை நாடு என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் நம்மூரு காடுகளிலும் திபு, திபுவென வளர்ந்து விடுகிறது. அடர்ந்த காடுகளில் மற்றும் மலைகளில் இயற்கையாக உள்ள இந்தச் செடி மூன்றடி உயரம் மட்டுமே வளரும். இதன் இலைகள் முருங்கை இலைகள் போல, சின்னதாக தண்டுகளில் இணைந்து காணப்படும். இந்த செடியில் மஞ்சள் நிறத்தில் பூவும் பூக்கும்.

இவை வறட்சியை தாங்கி வளரும் தன்மையுடவை. இதன் இலைகள், வேர்கள், காய்கள் அனைத்தும் மருத்துவப் பலன்கள் நிறைந்தது. இவை வீடு, வணிக நிறுவனங்களிலும் அழகுக்காகவும் வளர்க்கப்படுகிறது. இந்த மூலிகை செடி இருக்கும் இடத்தில் ஈக்கள் மொய்க்காது. இந்த செடி நாய், பூனைகளுக்கும் ஆகாது.

இந்த இலைக்கு எலும்பு முறிவு பாதிப்புகளை குணமாக்கும் ஆற்றலும் உண்டு. முதுகு தண்டு பாதிப்பை குணமாக்கும். முதுகுத்தண்டுவட வலி மற்றும் முதுகு வலி பாதிப்புகளையும் இது குணமாக்கும். சிறுநீர் கழிக்கும்



போது அவரும் எரிச்சலைப் போக்கும். சிறுநீர்த்தாரை அடைப்பை சரியாக்கும். கருப்பை பாதிப்புகளையும் அகற்றும். இந்த இலைகளுக்கு மூட்டுவலியை குணப்படுத்தும் தன்மையும் உண்டு. மன அழுத்தத்தினால் உருவாகும் நரம்பு பாதிப்புகளை குணப்படுத்தி இரத்தத்தை தூய்மைப்படுத்தி வயிற்றுப் புழுக்கள அழிக்கும்.

பெண்களுக்கு மாதவிலக்கில் ஏற்படும் இரத்தப் போக்கு பாதிப்புகளை சரி செய்யும். உடல் சூட்டையும் போக்கும். மேலும் அதனால் ஏற்படும் வாத உடல் வலி, வயிற்று வலியையும்

Dr.K. ராஜமாணிக்கம்

போக்கும். சுளுக்கைக், கூட இந்த இலை சுளுக்கெடுத்து விடும். அதாவது போக வைத்துவிடும். மூலவியாதி, உடல் அணுக்களை பாதிக்கும் புற்றுவியாதி ஆகியவற்றையும் சரி செய்யும். சுவாச பாதிப்பை போக்கும்.

இந்த இலைகளை பூண்டு சேர்த்து நீரில் கொதிக்க வைத்து, கீரையைப் போல் கடைந்து உணவில் சேர்த்து சாப்பிடலாம். இதனால் மூட்டு வலி, சிறுநீர்ப்பை அடைப்பு, மூச்சுத்திணறல் ஆகியவை ஓடிவிடும்.

இதேபோல் இந்த இலையை நிழலில் உலர்த்து, இடித்துப் பொடியாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். அதிமதுரப்பொடி, சதகுப்பை, கருஞ் சீரகம், இலவங்கப்பட்டை, இதையெல்லா பொடியாக்கி அனைத்தையும் ஒன்றாகக் கலந்து, அதில் சிறிதளவு எடுத்து அத்துடன் பணங்கற்கண்டு சேர்த்து தினமும் இருவேளை சாப்பிட்டு வர உடல் சூடு தணியும்.

உங்களை மன அழுத்தம் வாட்டுகிறதா? அதற்கும் கூட சதாப்பு இலை மருந்து தான். இந்த இலைகளை சிறிது எடுத்து, நன்கு மையமாக அரைத்து அத்துடன் சிறிது மிளகுத்தூள் சேர்த்து தினமும் இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால் மன அழுத்த பாதிப்புகள் விலகி, மனநிலை இயல்பாகும்.

இந்த இலைச்சாறை தேனில் குழைத்தும் சாப்பிடலாம். இந்த இலையை நன்றாக அரைத்து அந்த விழுதை மிளகுத்தூள்



சேர்த்து, கொஞ்சம் எடுத்து தாய்ப்பாலில் கலந்து குழந்தைகளுக்கு சங்கில் இட்டு வாயில் ஊட்டினால் குழந்தைகளின் மார்பு சளி மட்டுப்படும்.

பக்கவாத பாதிப்பால் பலரும் வீட்டுக்குள் முடங்கிப் போய் இருப்பார்கள். இவர்கள் சதாப்பிலைகளை நன்றாக அரைத்து உடலில் வாத பாதிப்பு உள்ள இடங்களில் மேலே தடவினால் சிறிது, சிறிதாக பாதிப்புகள் அகலும். இதேபோல் நரம்பு சுருட்டல் பாதிப்பையும் இது குணமாக்கும். இந்த இலைகளை நீரில் கொதிக்க வைத்து, அந்த நீர் வற்றியதும் ஆறவைத்து தினசரி இரண்டு அல்லது மூன்று வேளை பருகினால் மூட்டுவலி சரியாகும். குடல் புழு அழியும். இரத்த நாள அடைப்புகள் இருந்தால் அதையும் போக்கிவிடும்.

ஞாபசக்தியை அதிகரிப்பது, கண் வீக்கம், வலியை போக்குவது என இதன் பயன்கள் இன்னும் அதிகம். உங்க ஊர் நாட்டு மருந்து கடைகளில் இந்த இலை கிடைக்கிறதா என முயற்சித்து பாருங்களேன்

- தொடரும்



# வரலாறு காணாத வறட்சியில் நீர் நிலைகள்

நீர் மேலாண்மை என்பது தமிழர்களின் தனித்துவம். சேர, சோழ, பாண்டியர்கள் நிர்மாணித்த ஏரிகள், அணைகள், கால்வாய்கள் இன்றும் வரலாறு பகிர்கின்றன. நகர்மயமாக்கல் மெல்ல மெல்ல நீர்நிலைகளை விழுங்கி வருகிறது. அதுவும் தமிழக ஆட்சியாளர்களின் அகோர ஆசைகளுக்கு நீர்நிலைகள் அடிக்கடி பலிகடா ஆக்கப்படுகின்றன. கடந்த ஆண்டு கேரளாவில் வந்த வெள்ளம் நமக்கு மட்டும் வந்திருந்தால் தமிழகத்தின் கதி அதோ கதிதான். தமிழகத்தின் தலைநகரான சென்னையில் நீர்நிலைகள் எப்படி இருக்கின்றன என்பதை சொல்லி தெரிய வேண்டியதில்லை. சென்னையில் நீர்நிலைகளை சரியாக பராமரிக்கவில்லை என தேசிய பசுமை தீர்ப்பாயம், தமிழக அரசிற்கு தற்போது விதித்துள்ள ₹100 கோடி அபராதமே அதற்கு அத்தாட்சி. அடையாறு மற்றும் கூவம் ஆறுகள், பக்கிங்காம், விருகம்பாக்கம், அரும்பாக்கம் கால்வாய்கள் எப்படி இருக்கின்றன என்பது சென்னைவாசிகளுக்கே வெளிச்சம்.

கூவம் ஆற்றில் 13 ஆயிரத்து 592 இடங்களிலும், அடையாறில் 10 ஆயிரத்து 437 இடங்களிலும், பக்கிங்காம் கால்வாயில் 26 ஆயிரத்து 320 இடங்களிலும் ஆக்கிரமிப்புகள் இருப்பதாக கடந்தாண்டு அரசே பசுமை தீர்ப்பாயத்தில் ஒப்புக்கொண்டது. இவ்வளவு ஆக்கிரமிப்புகள் இருந்தால் தண்ணீர் எங்கே செல்லும்? கட்டுமான கழிவுகள், மணற்குவியல்கள், இறைச்சி கழிவுகள் ஆகியவற்றை கொட்டும் இடமாக நீர்நிலைகள் மாறினால் தண்ணீருக்கு போக்கிடம் ஏது? நீர்நிலைகளை பராமரிக்க தொடர்ந்து தமிழக அரசு தயக்கம் காட்டியதன் விளைவு தற்போது 100 கோடி அபராதத்தை தலையில் சுமக்கிறது. சென்னையில் மட்டுமே இவ்வளவு அபராதம் விதிக்கப்பட்டால் தமிழகத்தின் மற்ற மாவட்டங்களையும் கணக்கெடுத்தால் ஆயிரக்கணக்கான கோடிகளை தமிழக அரசு இழக்க வேண்டியதிருக்கும். கடந்த 7 ஆண்டுகளாக தமிழக அரசு நீர்நிலைகளை பராமரிக்க எடுத்த நடவடிக்கைகள் எதுவும் திருப்தியில்லை.

தமிழக முதல்வராக ஜெயலலிதா பதவியில் இருந்த காலத்தில் அவ்வப்போது மழைநீர் சேகரிப்பு திட்டம் பேச்சளவில் இருந்தது. இப்போதைய ஆட்சியாளர்கள், மன்னர் காலத்துக்கு பின்னர் இப்போதுதான் குளங்களை மராமத்து செய்கிறோம் என்கிற பெருமிதத்தோடு களம் இறங்கினர். உலக வங்கி உதவியுடன் தமிழகம் முழுவதும் குளங்களை மராமத்து செய்ய கோடி, கோடியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. குளங்கள் மராமத்து பணிகளில் 10 குளங்களுக்கு சேர்த்து பெரும் தொகை ஒதுக்குவதால் எவ்வளவு செலவீனம் என்பதையே அறிய முடிவதில்லை. குளங்களை தூர்வாருவதற்கு பதிலாக மணலை எடுத்து மத்தியில் குவித்து வைக்கின்றனர். விவசாயிகளுக்கு வண்டல் மணலை குளங்களில் இருந்து இலவசமாக வழங்குகிறோம் என கூறிக்கொண்டு அவர்களை அங்குமிங்கும் அலைக்கழிக்கின்றனர்.

எந்தவொரு நகரம் விஸ்தரிப்புக்கு உள்ளானாலும் நீர் நிலைகளை தொடக்கூடாது என்பது விதி. ஆனால் தமிழகத்தில் நீர்நிலைகளை நிரப்பியே நகர விரிவாக்கம் நடைபெறுகிறது. நகரமயமாக்கல் அடிக்கடி கால்வாய்களையும், ஏரிகளையும் காவு கொள்கிறது. 1980ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி சென்னையை சுற்றிலும் சுமார் 650 நீர்நிலைகள் இருந்ததாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இப்போது அதில் சுமார் 20 இருந்தாலே பெரிய விஷயம் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள். ரியல் எஸ்டேட், தொழிற்சாலைகள், காற்றாலைகள் என வருவாய் குவிப்பு நிறுவனங்களின் வளர்ச்சியில் நீர்நிலைகளும், விவசாய நிலங்களும் அழிந்து வருகின்றன. பசுமை தீர்ப்பாயம் சென்னை நீர்நிலைகளை மறுசீரமைக்க, மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்கள், இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆப் சயின்ஸ் உள்ளிட்டவைகளின் உதவியோடு நடத்திட முன்வந்துள்ளது. இப்பணிகளுக்கு பின்னராவது சென்னை நீர்நிலைகள் சாபவிமோசனம் பெற வேண்டும். நீராதாரங்களை அலட்சியப்படுத்தும் தமிழக அரசுக்கு இத்தகைய அபராதங்கள் படிப்பினையாக இருக்கும்.

- M. சத்யராஜ்

# அறிவிப்பு



A. ரமேஷ்



K. சண்முக சுந்தரம்



S. ஆறுமுகம்



N. சண்முகம்

**மேற்கண்ட இவர்கள் பத்திரிகையில் சரிவர செயல்படாத காரணத்தால் "மக்கள் விசாரணை" மாத இதழிலிருந்து கடந்த 2019 ஜனவரி முதல் பத்திரிகையின் அடிப்படை பொறுப்புகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள். இன்று முதல் இவர்கள் மக்கள் விசாரணை பத்திரிகையின் பெயரை பயன்படுத்த கூடாது என்று அறிவிக்கப்படுகிறது.**

**- ஆசிரியர்**




# சமூக வலைதளங்களில் அரசியல் கட்சிக்கு ஆதரவாக திரை நட்சத்திரங்கள்:

## கோப்ராபோஸ்ட் ரகசிய புலனாய்வில் அம்பலம்

மக்களைவைத் தேர்தலில் பணம் பெற்றுக் கொண்டு சமூக வலைதளங்களில் குறிப்பிட்ட அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக கருத்துகளை பதிவிட 36 இந்தி திரை நட்சத்திரங்கள் ஒப்புக் கொண்டதாக கோப்ராபோஸ்ட் நடத்திய ரகசிய புலனாய்வில் தெரிய வந்துள்ளது.பல்வேறு துறைகளில் நடக்கும் குற்றச் செயல்களை, ‘கோப்ரா போஸ்ட்’ என்ற புலனாய்வு ஊடகம் அவ்வப்போது அம்பலப்படுத்தி வருகிறது.

இதற்காக தங்கள் செய்தியாளர்களை மாறு வேடங்களில் அனுப்பி ரகசிய ஆய்வு நடத்தி தகவல்களை சேகரித்து அதை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், வரும் மக்களைவைத் தேர்தலை முன்னிட்டு கடந்த சில மாதங்களாக ‘ஆபரேஷன் கரோக்’ என்ற பெயரில் கோப்ராபோஸ்ட் ஒரு ரகசிய ஆய்வு நடத்தியது.

இதுகுறித்து கோப்ராபோஸ்ட் வெளியிட்ட செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: பாஜக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் சார்பில் செயல்படும் மக்கள் தொடர்பு முகமையின் பிரதிநிதிகளைப் போல கோப்ரா போஸ்ட் செய்தியாளர்கள், நடிகர் கள், இயக்குநர்கள், பாடகர்கள் உட்பட பிரபலமான சில இந்தி திரை நட்சத்திரங்களை அணுகினர்.

அப்போது, வரும் மக்களவை தேர்தலுக்காக அரசியல் கட்சி களுக்கு ஆதரவாக ட்விட்டர், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட் டவற்றில் கருத்துகளை பதிவிட் டால் கணிசமான தொகை பெற்றுத் தருவதாக பிரதிநிதிகள் கூறியுள்ளனர். இதற்கு, அமிஷா படேல், மகிமா சவுத்ரி, விவேக் ஓபராய், ராக்கி

சாவந்த், பூனம் பாண்டே, சன்னி லியோன் உள்ளிட்ட 36 பேர் ஒப்புக் கொண்டனர்.

ஒரு தகவலுக்கு ரூ.50 லட்சம்அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக ஒரு குறுந்தகவலை பதிவிட இந்தி திரை நட்சத்திரங்கள் ரூ.2 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரை கட்டணமாக கேட்டனர். குறிப்பிட்ட பிரமுகர்களை




பின்தொடர்வோர் எண்ணிக்கை அடிப்படையில் இந்தத் தொகை மாறுபட்டது. சிலர் 8 மாத ஒப்பந்தத்துக்கு ரூ.20 கோடி வரை கேட்டனர். இந்தத் தொகையில் 10 முதல் 20 சதவீதத்தை காசோலை அல்லது வங்கியில் நேரடியாக செலுத்தவும் பெரும்பகுதியை ரொக்கமாகவும் (கறுப்பு பணம்) வழங்குவதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர். இதை அவர்கள் மறுக்கவில்லை.அதேநேரம் ரஸா முராட், வித்யா பாலன், அர்ஷத் வர்சி மற்றும் சவும்யா தாண்டன் உள்ளிட்ட சில திரை நட்சத் திரங்கள் பணத்துக்காக அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக கருத்துகளை பதிவிட மறுப்பு தெரிவித்து விட்டனர்.

முக்கிய பிரமுகர்கள் பணம் பெற்றுக்கொண்டு அரசியல் கட்சிகள் சார்பில் சமூக வலைதளங்களில் கருத்துகளை பதிவிடுவது சட்டப்படி குற்றம். எனவே, இதுபோன்ற மறைமுக பிரச்சாரங்களை கண்காணிக்கவும் தடுக்கவும் தேர்தல் ஆணையம் உரிய விதிமுறைகளை உருவாக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. திரை நட்சத்திரங்கள், விளை யாட்டு வீரர்கள் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களை பல லட்சக்கணக்கானோர் சமூக வலை தளங்களில் பின்தொடர்கின்றனர்.

இதனால் இவர்கள் பதிவிடும் கருத்துகள் அவர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக, முக்கிய பிரமுகர்களை வணிக நோக்கத்துக்காக (விளம் பரம்) கார்ப்ரேட் நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்கின்றன. அவர்களும் மக்களின் நலனை கருத்தில் கொள்ளாமல், பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதாக குற்றம்சாட்டப்படுகிறது.

- தரணி

# கூட்டணியை கலாய்க்கும் மீம்ஸ் கிரியேட்டர்கள்

அதிமுகவுடன் பாமக கூட்டணி ஒப்பந்தம் செய்ததை தொடர்ந்து அதிமுகவை விமர்சித்து பாமக தலைவர்கள் பேசிய வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகின்றன. பார் உள்ளவரை, பைந்தமிழ் உள்ளவரை திராவிட கட்சிகளுடன் கூட்டணி கிடையாது என்று பாமக தலைவர் ராமதாஸ் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அதிமுக அரசை கடுமையாக விமர்சித்து வந்தார். குட்கா ஊழல் உள்ளிட்ட பல்வேறு ஊழல் தொடர்பாக பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டார். அதிமுக அரசின் அமைச்சர்கள் செய்துள்ள ஊழல் பட்டியலை தமிழக கர்னரிடம் அளித்தார். இந்நிலையில் நேற்று அதிமுக மற்றும் பாமக கட்சிகளுக்கிடையே நடைபெற்ற கூட்டணி பேச்சுவார்த்தையில் பாமகவிற்கு 7 மக்களவை தொகுகளையும், ஒரு மாநிலங்களவை தொகுதிகளையும் ஒதுக்கீடு செய்ய அதிமுக ஒத்துக் கொண்டது. அதன் அடிப்படையில் அதிமுக மற்றும் பாமக கட்சிகளுக்கு இடையே கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்நிலையில் அதிமுகவின் துணை ஒருங்கிணைப்பாளரும் தமிழக முதல்வருமாகிய எடப்பாடி பழனிசாமி மற்றும் ஒருங்கிணைப்பாளரும் துணை முதல்வருமாகிய ஓ.பன்னீர் செல்வத்தை விமர்சித்து பாமக நிறுவனர் ராமதாஸ் மற்றும் இளைஞர் அணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் பேசிய வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகின்றனர். இவற்றில் குறிப்பாக இவரெல்லாம் ஒரு முதலமைச்சர், ஒனுமே தெரியாம நிர்வாகமன என்னானு தெரியாம, சட்ட ஒழுங்குனா என்னானு தெரியமா லஞ்சம் மட்டுமே தெரிந்த முதலமைச்சர நாம இவ்வளவு நாள் வச்சிட்டு இருக்கோம். மானம், இனேம் ஏதாவது இருந்தா அவர் ராஜினாமா பன்னுவார். எவ்வளவு பேர் செத்தாலும் அவருக்கு கவலை இல்ல. எடப்பாடிக்கும் ஓபிஎஸ்சுக்கும் நிர்வாகமன என்னானு தெரியுமா, நிதி நிலைனா என்னானு தெரியுமா. இவங்க யாருக்கும் ஒன்னுமே தெரியாது, ஒன்னுமே தெரியாதவங்கதான் ஜெயலலிதா அமைச்சரவையில் அமைச்சரா இருந்தாங்க. ஒன்னுமே தெரியாத மண்ணு, காலில் விழுனா விழனும், டயர நக்கனுனா நக்கனும், இவங்களதான் ஜெயலிலதா மந்திரியா வைச்சுருந்தாங்.




அப்படி பட்டவர்தான் தமிழ்நாட்டின் முதல் அமைச்சர், என்று அன்புமணி ராமதாஸ் பேசிய வீடியோ சமூக வலைதள டிரெண்டிங்கில் முதலிடத்தில் உள்ளது. இதைப்போன்று உலகம் அழியும் வரை திராவிட கட்சிகளுடன் கூட்டணி கிடையாது. 101 சதவீதம் திராவிட கட்சிகளுடன் கூட்டணி கிடையாது என்று அண்புமனி பேசிய வீடியோவும் வைரல் ஆகி வருகிறது. மேலும் பார் உள்ளவும், பைந்தமிழ் உள்ளவும் திராவிட கட்சிகளுடன் கூட்டணி கிடையாது என்று உங்களுக்கு எத்தனை தடவை சொல்றது, வேனுனா பத்திரம் எழுதி தரட்டுமா என்று பாமக நிறுவனர் ராமதாஸ் செய்தியாளர் சந்திப்பில் ஒருவருக்கு பதில் அளித்து பேசிய வீடியோவும் வைரல் ஆகிவருகிறது. இதைப்போன்று பாமகவை கலாய்த்து மீம்ஸ்களும் அதிகமாக பகிரப்பட்டுவருகின்றன. அதில் என்ன டாக்டர் சார் ஊழல்வாதிகள் கூட எல்லாம் பிரண்ட்ஷிப்பா, அது வேற வாய், இது நார வாய், அட வெக்கம் கெட்டவங்களா இது எதுக்குடா வெள்ளையும் சொள்ளையுமா அலையனும், டாஸ்மாக் கடைகளில் இன்று முதல் குவாட்டருடன் மாங்காய் ஊறுகாய் கொடுக்கப்படும் தமிழக அரசு அதிரடி உள்ளிட் வாசகங்கள் அடங்கிய மீம்ஸ்சுகள் அதிகம் பகிரப்பட்டுவருகின்றன.

- A.C. குமார்

# சரித்திரம் சொல்லும்

வழியனுப்பி வைத்த தந்தைக்கும்
வரும் வரை கண்ணுறங்காமல் காத்திருந்த தாய்க்கும்
என் அண்ணன் வீரன் எனப் பெருமித்த தங்கைக்கும்
பிரியாத விடை கொடுத்தீரோ?

பால்குடி மறவா சிறுவனைப் போருக்கு
அனுப்பினாள் ஓர் ''வீரத் தமிழச்சி''
ஊங்களைப் போருக்கு அனுப்பிய
உம்மைப் பெற்றவளும் அவளின் வம்சமோ?

பாரதத் தாய் கண்ணில் இன்று செந்நீர்!
ஏனம்மா? ஈன்ற பிள்ளைகளைப் பிரிந்த வருத்தமா?
இல்லை! என் பிள்ளைகளை முதுகில்
குத்திவிட்டனர் பகைவர்கள்
நெஞ்சை நிமிர்த்தி எதிர்த்திருந்தால்
சரித்திரம் சொல்லும் என் செல்வங்களின் வீரத்தை!

சகோதரர்களே! உங்களை எங்கள் மனதிலும்
நம் மண்ணிலும் புதைக்கவில்லை! விதைத்திருக்கிறோம்!
அது வீறுகொண்டு முளைத்து வரும்!
உங்களின் கனவை பெய்ப்பிக்க
நம் தேசம் காப்போம்! இறுதி மூச்சு உள்ளவரை!



**செ கண்மணி குழந்தைவேல்**
*தமிழாசிரியை*
**வீ.ஜி.விகாஸ் பப்ளிக் பள்ளி**
*மல்லூர், சேலம்.*

# கொடிய நோய்களை உருவாக்கும் கோதுமை!

அந்தந்த நாடுகளின், அந்தந்த சீதோஷ்ண நிலைக்கு ஏற்ற உணவை, அந்தந்த நாடுகளில் வாழும் மக்கள் உண்டு வந்தால் மட்டுமே ஆரோக்கியமான வாழ்க்கை சாத்தியம். அமெரிக்காவின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ற ஓர் உணவை, இந்தியாவில் சாப்பிட்டால் அது என்ன மாதிரியான விளைவைத் தரும் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் புரியும். இன்னும் எளிமையாக சொன்னால் ஆற்று நீரில் வாழும் மீன், கடல் நீரில் செத்துப் போய் விடும். கடல் நீரில் வாழும் மீனை ஆற்றில் கொண்டு வந்து விட்டால் அதனால் வாழ முடியாது. உணவின், ஆரோக்கியத்தின் அடிப்படை இந்தத் தத்துவம்தான்.

ஆனால் விளம்பர மாயைகளுக்கும், மோசடியான உணவு அரசியலுக்கும் நாம் பலியாகி விட்டோம் என்பதற்கு எண்ணற்ற உதாரணங்கள் உண்டு. நம் தேங்காய் ஆபத்து, நம் நிலக் கடலை ஆபத்து, நம் பாரம்பரிய அரிசியால் ஆபத்து என்று இந்திய மண்ணில் விளையும் எல்லா உணவு வகைகளையும் ஆரோக்கியக் கேடு என்று நம்ப வைத்து ஓட்ஸையும், ரீஃபைண்ட் எண்ணெய்களையும் நம் தலையில் கட்டி விட்டார்கள். அதே போன்றதொரு மோசடிதான் இந்த சப்பாத்தி மோசடியும். இது தமிழர்களைக் குறி வைத்த வட இந்திய அரசியல் என்று உள்ளூர் லெவலில் புரிந்து கொள்ளலாம்.

வில்லியம் டேவிஸ் என்ற அமெரிக்க இதய நோய் நிபுணர் ஆரோக்கிய விழிப்புணர்வு தரும் எண்ணற்ற புத்தகங்களை எழுதியவர். இவர் எழுதிய 'Wheat Belly' என்ற புத்தகம் பரபரப்பாக பேசப்பட்டு, விற்பனையில் புதிய உச்சத்தை சமீபத்தில் எட்டிப் பிடித்திருக்கிறது. "இதய நோய்களுக்கு ஆஞ்சியோப்ளாஸ்டி அறுவை சிகிச்சைகளை செய்து வருபவன் நான். என்னிடம் சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் படும் துயரங்களைப் பார்த்து மிகுந்த வேதனைப் பட்டிருக்கிறேன். ஆஞ்சியோப்ளாஸ்டி என்பது இதய நோய்க்காக செய்யும் ஒட்டு





வேலைதான் என்பதை கொஞ்ச நாளிலேயே உணர்ந்து கொண்டேன். அதனால், இதற்கான மூலகாரணத்தைக் கண்டறிய வேண்டும் என்று முடிவு செய்தேன்.

முக்கியமாக, என்னுடைய அம்மாவே மாரடைப்பால் இறந்தது எனக்கு மிகப் பெரிய துக்கத்தைக் கொடுத்தது. அதனால், கடந்த 15 வருடங்களாக இதய நோய் சம்பந்தமான ஆராய்ச்சியிலேயே முழுவதுமாக என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். இத்தனை வருட ஆய்வின் பலனாக உருவானதுதான் நான் எழுதிய 'Wheat belly' எனும் புத்தகம்" என்று தன் புத்தகம் பற்றிக் கூறுகிறார் டேவிஸ். 'நோய்களை உருவாக்குவதில் கோதுமையின் பங்கு முக்கியமானது என்பது தெரிந்து அதிர்ந்து போனேன்' என்று டேவிஸ் கூறுவதுதான் இதில் ஹைலைட்.

"நம்மில் பெரும்பான்மையோர் இன்று சந்திக்கும் முக்கிய நோய்களான நீரிழிவு, உடல் பருமன் மற்றும் இதய நோய்களுக்கு மூலகாரணமாக இருப்பது நம் உணவில் சேர்த்துக் கொள்ளும் கோதுமை, கோதுமையிலிருந்து தயாராகும் மைதா, ரவை. நம் உணவிலிருந்து கோதுமையை நீக்கி விட்டால் நம் வாழ்க்கையே மாறி விடும். கோதுமை, உங்கள் ரத்த சர்க்கரை அளவை ஆச்சர்ப்படும் வகையில் அதிகரிக்கிறது. சர்க்கரை அளவை கட்டுப்படுத்தவும், உடல் எடை குறைக்கவும் கோதுமை பிரட் சாப்பிடலாம் என நினைக்கிறோம்.

உண்மையில் 2 ஸ்லைஸ் கோதுமை பிரட், ஒரு சாக்லேட் பாருக்கு இணையானது. கோதுமை சாப்பிடாத நோயாளிகளின் உடல் எடையில் ஒரு மாதத்துக்கு உள்ளாகவே மிகப்பெரிய வித்தியாசத்தைப் பார்க்க முடிந்தது. என்னிடம் வரும் நீரிழிவு நோயாளிகளில் 80 சதவீதத்தினர் கோதுமை உணவை எடுத்துக் கொள்பவர்களாக இருந்தார்கள். அவர்களை கோதுமையைத் தவிர்க்கச் செய்து சோதித்ததில் 6 மாதங்களுக்குப் பிறகு அவர்களிடத்தில் ரத்த சர்க்கரை அளவு வெகுவாக குறைந்ததை உணர்ந்தனர். **இதுமட்டுமல்ல, பல நோயாளிகள் தங்கள் கோதுமை அனுபவங்களையும் கூறியது. 'கோதுமை சாப்பிடுவதை நிறுத்திய பின் என்னுடைய இன்ஹேலர்களை தூக்கி எறிந்து விட்டேன்' என்று ஒரு ஆஸ்துமா நோயாளி கூறினார். '15 வருடங்களாக மைக்ரேன் தலைவலிக்காக மருந்துகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். மூன்றே நாட்களில் வலி போய் விட்டது.**

- தொடரும்

# எதுவும் நிறைவு செய்யமுடியாது!

ஒபாமா தனது 55 வது வயதில் அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார்

ஆனால் டிரம்ப் தனது 70 வது வயதில் தான் அதிபர் ஆகிறார்

பில்கேட்ஸ் தனது 30 களிலேயே உலகின் பெரிய செல்வந்தர் ஆனார்

ஆனால் INDITEX SPAIN நிறுவனத்தை தனது 50 ஆவது வயதில் தான் தொடங்கி அமான்சியோ ஓர்டேகா 80 வயதில் தான் உலகின் இரண்டாவது பெரிய செல்வந்தர் ஆனார்

இளமை காலங்களில் வாய்ப்பு கிடைக்காமலும் சரியான திரைப்படங்கள் அமையாமலும் தடுமாறிய விக்ரமிற்கு 34 வது வயதில் தான் சேது படம் அமைந்து திருப்பத்தை ஏற்படுத்தியது

24 வயதில் திருமணம் செய்த ஒருவர் தனது 30 வது வயதில் இறந்தார்

தனது 40 வயதில் திருமணம் செய்தவர் தற்போது 62 வயதில் உடல் நலத்துடன் உள்ளார் தனது மகளுக்கு தெம்பாக வரன் பார்த்து வருகிறார்

எல்லோருக்கும் எல்லாமும் அது அதற்கு உண்டான வயதில் கிடைப்பது அரிது எனவே உங்களுக்கு ஒன்று கிடைத்து விட்டால் அது கிடைக்காமல் போராடும் மற்றவரை ஏளனம் செய்யாதீர்கள்

உங்களை மற்றவரோடு சதா ஒப்பிட்டு உங்களிடம் இல்லாததை நினைத்து புலம்பாதீர்கள்

யார் கண்டது அடுத்த நொடி நமக்கு என்ன நடக்கும் என்று, இந்த உலகமே ஒரு பெரிய விபத்தால் உருவானது தான்

எனவே எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை எல்லாம் கட்டுப்படுத்த நினைப்பது முட்டாள்தனம்

இங்கே இப்போது இந்த நொடியில் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்களோ அதை முழுமையாக விழிப்புணர்வுடன் செய்யுங்கள்

அடுத்த நொடி நிச்சயம் அழகாய் மலரும் தேவைகளை நிச்சயம் பூர்த்தி செய்து கொள்ள முடியும்

ஆனால் ஆசைகள் ஓட்டை குடம் போல எப்போதும் நிறைவு செய்ய முடியாது. நோ பெய்ன் நோ கெய்ன்

- K. ரமேஷ் குமார்

# பத்திரிகையாளர்களின் கூட்டமைப்பு

- மக்கள் விசாரணை
- அருணை முரசு
- அரசியல் தீர்ப்பு
- பீப்பிள் டுடே PEOPLE TODAY
- நமது நகரம்
- அரசியல்
- ரிப்போர்ட்டர் வேர்ல்ட்
- அதிரடி குரல்
- கடல் துளிகள்
- உரிமை ரிப்போர்ட்டர் URIMAI REPORTER
- வெற்றி யுகம் POLITICAL & CRIME MONTHLY
- ரிப்போர்ட்டர் விஷன்
- தொட்டில் செய்தி
- நாற்காலி செய்தி
- தமிழன் குரல்
- திரை தீபம்
- போலீஸ் ரிப்போர்ட்டர்
- ஜகதன்
- சட்ட கேடயம்
- நுண்ணறிவு
- பாக்கியம் சினிமா
- கடல்சிற்பி
- THE DECEMBER MAIL
- பேனா முள்
- REPORTER FLASH
- அதிரடி தீர்ப்பு
- நியூஸ் பிரிட்ஜ் NEWS BRIDGE
- செய்திகள்
- புரசை எக்ஸ்பிரஸ்
- விழா முரசு
- தொகுதி முரசு THOGUTHI MURASU
- மூன்றாம் கண்
- உள்ளாட்சி சுடர்
- முள்ளும் மலரும்
- INDIA NEWS
- ஸ்ரீ ஆஞ்சநேயர் விஜயம்
- VADAPALANI XPRESS
- பல்லவன் முரசு
- மக்கள் பார்வை
- மண்ணின் குரல்
- விழிப்புணர்வின் குரல்
- மெய் எழுத்து
- தர்ம ராஜ்ஜியம்
- FINE TIME
- புதுவை ஒளி
- சிலந்தி வலை
- மக்கள் விருப்பம்
- திங்கள் மலர்
- வீரத்தமிழ்மறை
- தொழில்
- அமுதம் ரிப்போர்ட்டர்
- FACE NEWS
- PEOPLE PLUS

# பயம்

ஒரு பக்க சிறுகதை

ஓர் ஊரில் ஒரு குடியானவன் தன் மனைவி மகனுடன் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தான். அவளை அதிகமாக நேசித்தான். இப்படி சந்தோஷமாக இருக்கும் பொழுது அவன் மனைவியை ஒரு பாம்பு கடிக்க அவள் இறந்துவிட்டாள். இந்த நிகழ்ச்சியை அந்த மனிதனால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

அவனைப் கீபார்க்கவே பாவமாக இருந்தது. ஆனால் வேறு வழியில்லாமல் அவனைச் சமாதானப்படுத்தி சுடுகாட்டிற்கு அழைத்துச் சென்று அந்தப் பிணத்தை எரித்தார்கள்.

சரி இவன் அழுது அழுது தன்னைத் தானே சமாதானமாக்கிக் கொள்ளட்டும், மனிதன் தன்னைத் தானே சமாதானம் செய்துக் கொண்டால் தான் முழு ஆறுதல் அடைந்த திருப்தி பெறுவான். அவனும் அன்று இரவெல்லாம் அந்தச் சுடுகாட்டில் கத்தி அழுது கொண்டிருந்தான். அவன் அழுது கொண்டிருந்த இடத்தில் ஒரு மரம் இருந்தது. அதில் ஓர் அம்மா பேயும் ஒரு குட்டிப் பேயும் இருந்தது.

இந்த மனிதன் கத்தி அழுதுக்கொண்டே இருந்ததால் அந்தக் குட்டிப் பேய் தூக்கம் வரவில்லை. அதனால் அது கோபமாகத் தன் தாயிடம் அம்மா... அந்த ஆள் அழுவதால் எனக்குத் தூக்கம் வரவில்லை. நீ போய் அவனை பயமுறுத்தி துரத்திவிட்டு வா... என்று சொன்னது. அதற்கு அம்மா பேய்... வேண்டாம்.

அந்த மனிதன் இப்பொழுது அதிக கவலையில் இருக்கிறான். இந்த நேரத்தில் அவன் கவலை மட்டும் தான் அவனுக்குப் பெரியதாகத் தெரியும். இந்த நேரத்தில் நாம் போய் பயமுறுத்தினாலும் அவன் பயப்பட மாட்டான் என்றது. இந்தக் கூற்றை குட்டிப்பேய் ஏற்கவில்லை. எவ்வளவு பெரிய மனிதனானாலும் நிச்சயம் ஒரு பேயிக்கு பயந்து தான் போவான். நான் போய் அவனைத் துரத்துகிறேன் என்று சொல்லிவிட்டு அவன் எதிரில் வந்து நின்று அவனைப் பயமுறுத்தியது. பலவித பயங்கர சத்தங்களைக் கொடுத்தது. அங்கிருந்த மண் மற்றும் மர இலைகளை அவன் மேல் விழுமாறு செய்தது. மரத்தைப் பயங்கரமாக உலுக்கி அவனைப் பயமுறுத்தப் பார்த்தது.

உம்ம்ம்... ஒன்றிற்கும் அவன் பயப்படவில்லை. அவன் தன் கவலையை நினைத்தே அழுது கொண்டிருந்தான். குட்டி பேயிக்கே சலிப்பு வந்து அவனை விட்டுவிட்டு திரும்பி வந்து பேசாமல் இருந்து விட்டது. இப்பொழுது கொஞ்ச காலம் ஓடிவிட்டது. இந்தக் குடியானவன் தன் ஊர் மக்கள் சொன்னார்கள் என்று தன் மகனைக் காரணம் காட்டி இன்னொரு பெண்ணை மணந்து கொண்டு புதுப் பெண்ணுடன் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் வியாபாரத்திற்காக அந்தச் சுடுகாடு தாண்டிப் போக வேண்டியிருந்ததால் அப்பக்கமாகப் போய் கொண்டு இருந்தான். அவனை அந்தக் குட்டி பேய் பார்த்துவிட்டு தன் அம்மாவிடம்... தன் வாழ்நாளிலேயே தான் பார்த்தத் தைரியசாலி இவன் தான் என்றது. அதற்கு அம்மா பேய்... அவன் தைரியசாலி கிடையாது. வேண்டுமானால் இப்பொழுது அவன் எதிரில் நீ போய் சும்மா நின்று பார் என்றது. குட்டிப்பேயும் உடனே அந்தக் குடியானவன் முன் சும்மா வந்து நின்று சிரித்தது.

அந்தக் குட்டிப்பேயைப் பார்த்தது தான் தாமதம். அந்தக் குடியானவன் பயந்து வாய் உலறி நடுங்கிப் போய் தலைதெரிக்க ஓடி போனான். குட்டிப் பேய் அம்மாவிடம் வந்து... அன்றைக்கு தான் முழ பலங்கொண்டு பயமுறுத்தியும் பயப்படாதவன் இன்று நான் சாதாரணமாக எதிரில் போய் நின்றதும் பயந்து ஓடியது ஏன்...? என்று கேட்டது.

இதற்கு அம்மா பேய், மனிதன் சந்தோஷமாக இருக்கும் பொழுது தனக்கு ஏதாவது துன்பம் வந்து விடுமோ என்ற பயத்திலேயே வாழ்கிறான். அந்த நேரத்தில் ஒரு சிறிய பயத்தைக் கொடுத்தாலும் அவன் அதிகமாக பயந்து விடுகிறான்.

இதே கவலையான நேரத்தில் அந்தக் கவலையை விட தனக்கு வேறு துன்பம் இல்லை என்று அரட்டுகிறான். அதனால் மனிதன் அதிக சந்தோஷமாக இருக்கும் பொழுது தான் அவனை மிகச் சாதாரணமாக பயங்கொள்ள வைத்துவிட முடியும் என்றதாம்.


கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.

உண்மை துணிவு நேர்மை

# அரசியல் தீர்ப்பு

சமூகம், அரசியல் மற்றும் புலனாய்வு இதழ்



# மோடியின் எல்லை அரசியல்

MAKKAL VISARANAI, Tamil Monthly. Regd. No. TN/CC(S)DN/461/19-21
Registered with Registrar of Newspaper for India Under No. TNTAM44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month


# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்









- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements

and anything







No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33334, Ph : 044 - 4861 5321**